# புதினம்

மாதம் இருமுறை

இதழ் - 4. 15. 6. 94

பக்கம் 20. ரூபா: 10/-

★ நாவலர், சைவப்பெரியார், பண்டிதமணி நூல்களை மறுபதிப்புச் செய்ய நமது கோவில்கள் முன்வருமா?

★ ஈழத்து எழுத்தாளருக்கு இலக்கியப் பரிசுகள் ★ சிரிப்பு.

★ மாணவர் மத்தியில் மொழி வறுமை நீங்க வேண்டும்

★ பாரதக்கதை ★ இறுதி யுத்தம் ★ நாவற்குழியூர் நடராசன் கவிதை

★ சிங்கள கத்தோலிக்க சிறுபான்மையினருக்கு அச்சுறுத்தல்.

# சந்திரிகாவால் முடியுமா?

ஜனாதிபதி தேர்தலில் விஜயதுங்காவோடு போட்டி போடுவது பெரும்பாலும் சந்திரிகாவே என்பது தீர்மானமாகி விட்டது.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் சந்திரிகா போட்டியிடுவார். சந்திரிகாவுக்கு வெற்றி வாய்ப்புக்களும் அதிகமாக இருப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

விஜயதுங்காவை நான்கு லட்சம் வாக்குகளால் சந்திரிகா வெற்றி கொள்வாரென்று தேசிய உளவுப் பணியகம் நடத்திய ஆய்வு தெரிவிக்கின்றது.

விஜயதுங்காவை விட சந்திரிகாதான் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடுமென்று தமிழ் மக்களுக்கும் நம்பிக்கை இருக்கிறது.

ஆனால்,

சந்திரிகா தேர்தலில் வெற்றி பெற்றாலும் — இப்போதே பிக்குகள் முன்னணி வடக்கையும் கிழக்கையும் இணைக்கக்கூடாதென்று போர்க் கொடி தூக்கியிருக்கிறது. இன்னும் சில உதிரிகள் சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுவார்கள்!

ஐ. தே. கட்சியே முஷ்டியை ஓங்கிக் கொண்டு எதிர்க்கக் கூடும்.

இப்படியான எதிர்ப்புக்களை உதாசீனம் செய்து விட்டு,

தொண்டமான், சபாநாயகர் மொகமட் போன்றோரை இணைத்துக் கொண்டு சந்திரிகா இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு. —

இச் சாதனை படைப்பாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதினம்

மாதம் இருமுறை

*

ஆசிரியர்: 'வரதர்'

*

இணை ஆசிரியர்: 'புத்தொளி.

*

செய்தி ஆசிரியர்: 'சுகுமாரன்'

*

விளம்பர முகாமையாளர்: மா. யோகுருநாதன்.

அலுவலகம்:

226, காங்கேசன்துறைச்சாலை யாழ்ப்பாணம்.



மீண்டும் பழைய உரிமையாளரின் நிர்வாகத்தில் - 3 மொழிகளிலும்

★ றப்பர் ஸ்ராம்ப்

★ மேற் ஸ்ராம்ப்

★ பிளாஸ்டிக் போட்

★ விளம்பர போட்

★ நம்பர் பிளேட்

குறித்த தவணையில் அழகுறச் செய்து கொள்ள

**வீமா**

றப்பர் ஸ்ராம்ப்

**VEEMA**

**Rubber Stamp**

(ஆனைப்பந்தி வைத்திய சாலை முன்பாக)

ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்


# ஈழத்து எழுத்தாளருக்கு இலக்கியப் பரிசுகள்

தமிழ் நாடு கோயம்புத்தூரில் ''லில்லி தேவசிகாமணி இலக்கியப் பரிசு'' என்று ஒரு திட்டம் இருக்கிறது. ஆண்டு தோறும் சிறந்த இலக்கிய நூலுக்கு இவர்கள் பரிசு வழங்கிச் சிறப்பிக்கிறார்கள்.

1993 ம் ஆண்டுக்கு உலகெங்கும் வெளிவந்த சிறந்த தமிழ்ச் சிறுகதைத் தொகுதிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதில் சிறப்பு என்னவென்றால், 1993 ஆம் ஆண்டுக்கான இரண்டு பரிசுகளும் ஈழத்தவர்களுக்கே கிடைத்திருப்பதுதான்!

முதற் பரிசு 'எஸ். பொ.' எழுதிய 'அவா' என்ற நூலுக்கு.

இரண்டாவது 'செங்கை ஆழியான்' எழுதிய ''யாழ்ப்பாணத்து இராத்திரிகள்'' என்ற நூலுக்கு.

22. 5. 94 ல் நடந்தேறிய விழாவுக்கு நேரில் வந்து பரிசுகளைப் பெற்றுக் கொள்ளும்படியும், போக்கு வரவுச் செலவு வழங்கப் படுமென்றும் எழுத்தாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. செங்கை ஆழியானுக்கு 2. 6. 94லேயே — விழா நடைபெற்று பத்து தினங்களின் பின்னரே அழைப்பிதழ் வந்து சேர்ந்ததாம்!

## கேள்வி - பதில்

அடுத்த இதழிலிருந்து 'கேள்வி பதில்' என்ற பகுதி ஆரம்பமாகிறது. உடனடியாக வாசகர்கள் கேள்விகளை எழுதி அனுப்பலாம்.

# நாவலர், சைவப்பெரியார், பண்டிதமணி நூல்களை மறுபதிப்புச் செய்ய எமது கோவில்கள் முன்வர வேண்டும்!

— சாமிஜி

''நாவலரின் நூல்கள் இப்போது கிடைப்பதில்லை'' என்று குறைபட்டுக் கொண்டார் இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர் ஒருவர்.

அவர் இப்போது தான் உத்தியோகத்திலிருந்து இளைப்பாறியிருக்கிறார்.

ஓய்வு காலத்தில் சைவமும், தமிழும் படிக்க அவருக்கு விருப்பம்!

சைவப் பெரியார் சிவபாதசுந்தரனாரின் நூல்களும் கிடைப்பதில்லை என்பது இன்னொரு நண்பரின் குறை.

வங்கி உத்தியோகத்தரான இவர் ஏதோ ஒரு உந்துதலில் 'சைவ சித்தாந்தம்' படிக்கத் தொடங்கியிருக்கிறார்.

சைவப் பெரியாரின் ''Glories Of Saivaism'' ''Saiva School Of Hinduism'' ''Outlines Of Sivagnanabodham'' ''சைவ போதம் இரண்டாம் புத்தகம்'' 'திருவருட் பயன் உரை' என்ற நூல்களை பலரும் மிகுந்த ஆவலுடன் தேடி வருகிறார்கள். எடுக்க முடியவில்லை.

பண்டித மணியின் ''சமயக் கட்டுரைகள்'' 'கந்தபுராண கலாச்சாரம்' 'சிந்தனைக் களஞ்சியம்' என்ற நூல்களும் கிடைப்பதில்லை.

நாவலரும், சைவப் பெரியாரும், பண்டிதமணியும் நமது சைவ உலகின் மும்மணிகள்!

சைவமும் தமிழும் வளர உழைத்தவர்கள். எழுதியவற்றை தெளிவாக எழுதியவர்கள்; விளக்கமாக எழுதியவர்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பல பாடசாலைகள் நூலகங்களிலும், பிரதேச சபை நூலகங்களிலும் இவர்களின் நூல்களைக் காண முடியவில்லை. தேடியும் கிடைக்கவில்லை.

புத்தகக் கடைகளில் இவர்களின் நூல்கள் ஒன்றையுமே விற்பனைக்கு காணவில்லை!

புதியசந்ததியினர் பலருக்கு இவர்கள் இப்படியான நூல்களை எழுதியிருப்பது தெரியவும் இல்லை!

இந்த நிலை தொடர்ந்தும் இப்படியே நீடிக்க வேண்டுமா?

நாவலர், சைவப் பெரியார், பண்டிதமணி ஆகியோரின் நூல்களை மறு பதிப்புச் செய்து தமிழ் மக்கள் அனைவருக்கும் பயன்படக்கூடிய நடவடிக்கைகளை ஏன் எடுக்கக் கூடாது?

தனி ஒரு நபரோ அல்லது தனி ஒரு நிறுவனமோ செய்யக் கூடிய காரியமல்ல இது!


ஊர் கூடித்தான் தேர் இழுக்க வேண்டும்!

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாம்பூல தாம்பாளம்

★ ★ சுந்தர் ★ ★



சேகரி - அண்ணை பொன்னிப் பேத்தியின்ரை புதினம் கேட்டியே! கிழவி கிணத்துக்குள்ளை விழுந்துபோய்ச்சாம்.

சேனாதி: என்ன? மாரிக்கிணத்துக்குள்ளேயோ? சொல்லணப்பா... ...

சேகரி - இது கிழவி நவரத்தின சாமி போல சுழி ஓடி நீந்திக் கொண்டு இருந்தது.

சேனாதி:- கிழவிக்கு நீந்தத் தெரியுமோ?

சேகரி:- தாமரைக் குளத்துக்குப் பக்கத்தில வீடு..... அங்கை நீந்திப் பழகியிருக்க வேணும்! அவா கிளாலியிலும் நீந்துவா......... திருப்பாற்கடலிலும் நீந்துவா.........

சேனாதி:- நாலு பிள்ளையளும் நாலா பக்கத்தில...... ஆர் தூக்கினது?

சேகரி:- அயல் வீட்டுக் கிழட்டுக்கட்டைதான்! இப்ப யாழ்ப்பாணத்தில கிழடுகள்தான்! யாழ்ப்பாணம் விரைவில் வயோதிப மடமாய் மாறிவிடும்; ஓம் யாழ்ப்பாணம் இண்டைக்கு குண்டாலையும் குலுங்குது! கிழடுகளின் இருமலாலையும் குலுங்குது... குடா நாட்டு நுழைவாயிலிலை யாழ்ப்பாணம் வயோதிப மடம்' என அறிவிப்பு பலகை போட்டாலும் போடலாம்.... ...

சேனாதி:- நோய் நொடி வந்தால்......

சேகரி:- அதுகள் அனுங்கிறது கனடாவுக்கு கேட்கப்போகிறதே.........? அயல் வீடுதான் தண்ணி 'வென்னியெண்டு குடுக்கும்.

சேனாதி:- அயலோடு வேலி வழக்கு பேசினதை இப்பத்தான் உணருவினம்; சரி......இப்ப நீ எங்க போறாய்?

சேகரி:- தபால் கந்தோருக்கு! பொடியங்கள் வீட்டு விலாசத்தை மறந்து போனாங்களோ அல்லது தமிழை மறந்து போனாங்களோ! தெரியவில்லை இருந்தும் வீட்டு விலாசத்தை நினைப்பூட்டி ஒரு கடிதம் போடுவம்.

# நாங்கள்

**நாவற்குழி நடராசன்**

பகைவர் தம்மை நடுநடுங்கப்
பண்ணி வைத்த பாண்டியர்
பாதுகாப்பின் சீழுயிர்த்து
பண்பிழந்தோர்கள் நாங்களா?
வகைகள் கொண்ட சேனை வந்து
வளைய மிட்ட போதெல்லாம்
வாளை வீசி வாகை பூண்ட
வம்மி சததார் நாங்களா?
தகைமை கொண்ட ரேசசோழர்
தங்குலத்து தித்த நாம்
தாள் மடித்துக் கை குவித்துத்
தலை வணங்கி நிற்பதா?
சிகைகள் போல தாயினும் நம்
ஜென்ம பூமி வேறொரு
சீமையாளர் கைக் கொடுத்துச்
சீரழிந்து வாழ்வதா?

அந்நியர்கள் வந்து நாட்டை
அடிமை கொள்ளப் பார்க்கையில்
ஆர்த்தெழுந்த திங்கு முன்னர்
ஆண் பிள்ளைகள் மட்டுமா?
கன்னியர் கை வாளெடுத்துக்
கட்டு மீறிச் சென்று போர்க்
காட்டினூடு பகைவர் தம்மைக்
கண்ட துண்ட மாக்கினர்!
சென்னி வீழ வீழ நின்று
ஜென்ம பூமிக் காக நம்
சிறுவர் கூடச் சமர்புரிந்து
சீருமுண்டி வற்றினைப்
பன்னியென்ன பயனுடைத்து?
பண்டை நாள்நி கழ்ந்தபோற்
பண்ணி வைக்க வேண்டு மிந்தப்
பாரிலெங்கள் நாட்டினை!

கொடியர் தம்மை முடிவு செய்யக்
கொற்றவர் களில்லையோ!
கோதிலாத பேரை வாழ
வைக்க மற்றோர் இல்லையோ!
கடமையென்று நாடு காக்கக்
கற்றவர்கள் இல்லையோ!
கடையர் தம்மை ஓட்ட வலிமை
உற்றவர்கள் இல்லையோ!
அடிமையாக நாங்களென்றும்
படியிலஞ்சி வாழவோ!
அவர்களான நாங்களென்ன
ஆண்மையற்று மாளவோ!
கடவுயானை தேர்கள் கொண்ட
பெருமை யின்று போகவோ
கடவுளே எமக்கும் இந்தக்
காலம் வந்து சேரவோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள கத்தோலிக்க சிறுபான்மையினருக்கு ஓர் அச்சுறுத்தல்!

பெரும்பான்மை மக்களாகிய சிங்கள மக்களிடத்திலிருந்து சிறுபான்மையினர் மீது வேறு ஒரு வடிவத்தில் அச்சுறுத்தல் ஒன்று முளை கொண்டுள்ளது.

அந்த அச்சுறுத்தலில் சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் கத்தோலிக்க மக்கள் மதரீதியில் சிறுபான்மையினராகி அந்த அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

பத்துலட்சம் பௌத்த மக்கள் பௌத்தர்களின் மேலாண்மையை உறுதிப்படுத்த, பல கோரிக்கைகளடங்கிய மகஜர் ஒன்றை ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா விடம் கையளிக்க இருக்கிறார்கள்.

மகாநாயக்கா தேரோக்கள், பௌத்த பிக்காயத் தலைவரிகள் முக்கிய பௌத்த மதத் தலைவர்கள் தலதா மாளிகையில் மகஜரில் கையெழுத்திடும் வைபவம் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

சர்வமத கோட்பாடு என்ற ஏமாற்று வேலையை தடை செய்வதோடு, அரசியலமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள உறுதி மொழிகளுக்கமைய பௌத்த சாசனத்துக்கு முக்கியத்துவம் அளிக்காமலும், தனியான பௌத்த கிராமங்களில் வேறு மத ஆலயங்கள் அமைக்கப் படுவது தவிர்க்கப்பட வேண்டும் மென்று குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை ஆரம்ப காலத்தில் ஒன்றாக இருந்த இனங்கள் பௌத்த மத சிந்தனை மேலோங்கியக் கால் இன்று இனங்கள் பிரிவினை கோரும் நிலைக்கு வந்துள்ளனர் என்றே பேராசிரியை குமாரி ஜயவர்த்தனா போன்ற புத்தி ஜீவிகள் அவ்வப்போது கருத்துகளை இன்று வெளியிட்டு வருகின்றனர்.

இந்த பௌத்த மக்களின் புதிய நடவடிக்கையால் ஏற்கனவே சிறுபான்மை இனங்கள் இதயங்கள் மீது இறல் விழுந்த நிலையில் மீண்டும் ஓர் பிரச்சினையை முன் வைப்பதால், நாடு நல்ல நிலையில் இருக்குமா என்பது கேள்விக் குறியாக உள்ளது,

இஸ்லாமிய மக்கள் மீதும் இதே போன்ற காழ்ப்புணர்ச்சிகள் உள்ளன என்பதை பத்திரிகைகளில் வரும் செய்திகளில் இருந்து புரிகின்றன. சபாநாயகர் எம். எச். மொகமட் இஸ்லாம் மதம் அரசாட்சியில் இல்லாத நாடுகளை ஒன்று படுத்தி ஒரு அமைப்பை உருவாக்கி கொழும்பில் ஒரு தலைமையகத்தை ஏற்படுத்த இருக்கிறார் என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளியிட்டதோடு இலங்கையில் உள்ளது போன்று முஸ்லீம் கலாச்சார திணைக்களம் இந்தியாவில் இருக்கிறதா? பௌத்த கொடியோ பௌத்த சாசனத்தையோ இஸ்லாமிய நாடுகளுக்கு எடுத்துச் செல்ல முடியுமா? என்று பத்திரிகைகள் கேள்விகள் தொடுத்துள்ளன.

தங்களை வலுப்படுத்தக் கோரும் பௌத்த மக்கள், இந்நாட்டில் வாழும் ஏனைய மதங்களின் உரிமைகளை எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்று கூறாமல் விட்டால், அந்நாட்டு இனப்பிரச்சினை போன்று ஒரு புதிய பிரச்சினை முளை கொள்ளுமா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

# சிரிப்பு! சிரிப்பு!

வீட்டுக்காரி; பால் 'திக்' காயில்லையே ஏன்?

* *

பால்காரன்; அம்மா, நீங்கள் பார்க்கவில்லையா? இப்போது உங்கள் முன் தானே மாடு தண்ணீர் குடித்தது?

*

இராமன்; எங்களப்பா பொல்லாதவர். அவர் பேரைச் சொன்னால் அழுகிற குழந்தையும் கப்சிப்னவாயை மூடும்

கிருஷ்ணன்; ஹூம்! இம்மட்டுந்தானா? எங்களப்பா பேரைச் சொன்னால் தூங்கும் குழந்தை கூட எழுந்திருந்து வாள் வாள், என்று அழுமே.

* *

மாணவன்: ஏன் சேர் அவனுக்கு 'வரகுண பாண்டியன்' எனப் பேர் வைத்தார்கள்?.

ஆசிரியர்: அவனுக்கு 'டையபிட்டிக்' நீரிழிவு நோய். அவன் வரகுச் சோறு தான் உண்பது.

* *

சகுந்தலா: நாய் குரைக்கிறதென்று பயப்படாமல் சும்மா வாருங்கள். 'குலைக்கிற நாய் கடிக்காது' என்று பழமொழி படித்ததில்லையா?.

சுபத்திரா: நான் படித்திருக்கிறேன். நாய் படித்திருக்குமோ என்னவோ என்றுதான் பயமாயிருக்கிறது.

* *

தாய்: குழந்தாய். நீ குழப்படி பண்ணும் போது என் மனம் நொந்து என் தலை மயிரில் ஒவ்வொன்றும் நரைத்துப் போகும்.

மகன்: அம்மா. சிறு வயதில் நீங்கள் குழப்படிக் காரியா?. பட்டி தலை மயிரைப் பார் ஒரே வெள்ளையாய் இருக்கிறதே.

* *

மகள்: எங்கள் ரீச்சருக்குக் கடவுள் பக்தி அதிகம் அம்மா.

தாய்: ஏன்?.

மகள்: நான் ஏதாவது கேள்விக்குப் பதில் சொன்னால் கூடக் 'கடவுளே'. கடவுளே!? என்று சத்தம் போடுகிறார் ரீச்சர்!

* *

சேகர்: உமாவுக்கு நேற்று நீ காதல் கடிதம் கொடுத்தாயா?.

ரவி: ஆமாம் உனக்கு எப்படித் தெரிந்தது?.

சேகர்: அவள் காலிலுள்ள செருப்பு பிஞ்சிருக்கு.

* *

தரகர்:— பையனுக்குச் சீதனம் ஒரு லட்சம்; கார்; நல்ல மாடி வீடு வாங்கித் தந்தால் போதுமாம். அப்புறம் எதுவும் வேண்டாமாம்.

பெண்ணின்தந்தை:— அப்படியா? இவையெல்லாம் கொடுத்தால் பெண் கூட வேண்டாமென்று சொல்லி விடுவான் போலிருக்கே!

## நீங்களும் எழுதலாம்

நகைச் சுவைத் துணுக்குகளை வாசகர்களும் எழுதி "நகைச்சுவை, புதினம், 226, காங்கேசன் துறைச் சாலை, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

ஏற்கெனவே பத்திரிகைகளில் வந்த துணுக்குகளை அப்படியே 'கொப்பி' பண்ணி அனுப்பாமல் சற்றே சுயமாகச் சிந்தித்து எழுதுங்கள். ஒவ்வொரு இதழிலும் வெளிவரும் நகைச்சுவைத் துணுக்குகளில் சிறப்பானதற்கு நட்சத்திரக் குறியிட்டு ரூபா 50 பரிசும் வழங்கப்படும். துணுக்குகள் இரண்டு வரியிலும் இருக்கலாம், இருபது வரியிலும் இருக்கலாம்.

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. தே. கட்சியின் வியூகம்

ஐ. தே. கட்சி சரிந்து போன தனது இமேஜை சரி செய்யப்படாத பாடுபடுகிறது. ஜனாதிபதி விஜேதுங்கா கோட்டைவிட்ட வெகுஜன ஆதரவை மறுபடி உருவாக்கவும் அது முயற்சிக்கிறது.

அதன் முதல் பலியாக சிறிசேன கூரேயின் ஐ. தே கட்சி செயலாளர் பதவி பறிக்கப்பட்டது. சொத்தி உபாலியை மக்கள் மன்றத்தில் நிறுத்தியுள்ளது. பல பொதுச்சபை உறுப்பினர்களை ராஜினாமாச் செய்ய வைத்தது. தேசியப் பட்டியல் எம். பிக்களை ராஜினாமாச் செய்விப்பதன் மூலம் பதியவர்களை பாராளுமன்ற உறுப்பினராக்க முயற்சிக்கிறது. பல மந்திரிகளை மாற்றி புதிய மந்திரிகளை அறிமுகம் செய்ய அத்திவாரமிடுகிறது.

காமினியின் உறவினரான சரத்அமனுகாவை லேஹ் கவுசின் தலைவராக நியமித்தார்.

ஐ. தே. கட்சியின் செயலாளராக டாக்டர் காமினி விஜயசேகரா நியமிக்கப்பட்டார்.

தேர்தலில் வெற்றி பெற அமைச்சர் ஏ. சி எஸ். ஹமீது தலைமையில் அமைச்சர் குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார் அமைச்சர் ஹமீத் சிறுபான்மை இனத்தவர். அவருக்கும் பிரச்சினைகள் உண்டு.

அவர் ஐ. தே. கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் உடன் பாட்டிற்கு வர வேண்டும் என்று கூறியுள்ளார்

சிறுபான்மையினர் பிரச்சினை இனப் பிரச்சினையை இரு கட்சிகளும் தேர்தல் பிரச்சனையாக்காது இருக்க அமைச்சர் முயல்வதாகத் தெரிகிறது.

ஆனால் ஸ்ரீ. ல. சு. கட்சியில் இன்று தாயார் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவைவிட மகள் சந்திரிகா முன்னணியில் நிற்கிறார். மேல் மாகாண சபை முதலமைச்சராக இருக்கும் சந்திரிகா மாகாண சபைகளுக்கு எதுவித அதிகாரமுமில்லை என்பதைப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். மாகாணசபை எல்லைகளை வகுத்து மாகாண சபைக்குக் கூடுதல் அதிகாரம் கொடுப்பதன் மூலம் தமிழ் மக்கள் பிரச்சினைகளைத் திர்க்க முடியுமென சந்திரிகா நம்புகிறார் ஆனால் தேர்தலுக்கு முன் தமிழ் மக்களை இவர்களால் திருப்திப் படுத்த முடியுமா என்பதே கேள்விக் குறியாக இருக்கின்றது.

அரசாங்கம் இனப்பிரச்சினை பற்றி அக்கறைப் படும் போது சுதந்திரக்கட்சியும் இது பற்றி அகலகால் வைக்க முயற்சிப்பது இயல்பு தான்.

தேர்தல் ஆதாயத்தைக் கருதி 17 லட்சம் மாணவருக்கு மதிய உணவு வழங்க முன் வந்திருக்கின்றது அரசு. அரசு மற்றும் தனியார் துறைத் தொழிலாளருக்கு வரிச்சலுகைகளை நீடிப்பதென்றும் வேறு பல சலுகைகளையும் அறிவித்துள்ளது. விவசாயிகளுக்கு மறுபடியும் உரமான்யம் வழங்கவும் நடுத்தர அளவுக்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு மின் கட்டனத்தைக் குறைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இப்படி தேர்தல் சலுகைகளைச் சண்டி திறைசேரி திணறுகிறது. உலக வங்கியும் இனிச் சரிவராதென்றே அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

ஸ்ரீல. சு. கட்சிசார்பில் ஸ்ரீமாவோவும் ஐ தே. கட்சிசார்பில் விஜேயதுங்காவும் போட்டியிடுவார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த இருபகுதி நிலைவரமும் எதிர்வரும் சில மாத நிலை வரங்களைப் பொறுத்து மாறும் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இன்று நடக்கும் நிலைவரங்களைப் பார்த்து எதிர் காலத்தைத் திட்டவட்டமாகத் கூற முடியாமலிருக்கின்றது

ஸ்ரீமாவோவும், டி. பி. விஜேதுங்காவும் 70 தைத் தாண்டிவிட்டார்கள். சந்திரிகாவும் காமினியும் கவர்ச்சியான, ஜனதிபதி வேட்பாளர்கள். 1995 ல் ஜனாதிபதியாக சந்திரிகா அல்லது காமினிதான் இருப்பார்களென்று பரவலாகப் பேசப்படுகின்றது.

தென்மாகாணத் தேர்தல் முடிவின் பின்னர் எதிர்கட்சிக் கூட்டணியான பொதுசன மக்கள் முன்னணி நாடு முழுவதும் தமக்கு செல்வாக்கு அதிகம் என மார்தட்டுகிறது.

சிறுபான்மை மக்கள் வாக்குகளையும் தொண்டமானையும் நம்பியிருக்கும் யூ. என். பி. தமக்கே வெற்றி எனத்தண்டோராப் போடுகிறது.

தென்பகுதியில் தமிழ் மக்கள் ஐ. தே கட்சியின் சங்கிலித் தொடரான கைதினாலும் பயமுறுத்தல், பணம் பறித்தலினாலும் ஐ தே. கட்சிக்கு இதுவரை இருந்த செல்வாக்கு செல்லாக்காசாகி வருகிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன அல்லது கூடித்திரிந்த குரங்கு ஆண்டாலென்ன என்ற விரக்தியே காணப்படுகிறது. வாக்குறுதிகளினால் பேச்சு வார்த்தையினால் ஒப்பந்தங்களினால் தமிழ் மக்கள் இனியும் ஏமாறமாட்டார்கள்.

அத்துடன் வடக்கு கிழக்கு தளத்தில் நிற்கும் எச். ரி. ரி. போராளிகள் ஏற்றுக் கொள்ளாத எந்தத் தீர்வும் தமிழ் மக்களைத் திருப்தி செய்ய முடியாதென்பது முடிந்த முடிவாகும். O

★ வாட்டர் பம்ப் உதிரிப் பாகங்கள்

★ வார்புப் பம்புகள்

மற்றும் எல்லா விதமான ஆணி வகைகளுக்கும்

## செல்வா இரும்பகம்

217, அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

(கு -1.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதக் கதை

பீஷ்மருக்கு வயதாகி விட்டதாலும் தான் திருமணம் செய்யப் போவதில்லை என்று அவர் கூறிய சபதம் எல்லா நாட்டினருக்கும் தெரிந்திருந்தாலும், அவர் சும்மா மரியாதைக்காகச் சுயம்வரம் காணவந்திருப்பதாகவே எல்லாரும் நினைத்தார்கள்.

காசி மன்னனுடைய புத்திரிகளான அம்பை, அம்பிகை, அம்பாலிகை ஆகிய மூவரும் திருமணப் பருவம் அடைந்திருந்த படியால் மூவரும் கையில் மாலையுடன் சுயம்வர மண்டபத்துக்கு வந்தார்கள்.

அந்தக் காலத்தில் மூன்று பெண்களையும் ஒருவரே மணப்பது மிகுந்த வழக்கத்திலிருந்தது.

அரசகுமாரிகள் மூவரும் சுயம்வர மண்டபத்திலிருந்த அரச குமாரர்களின் விபரங்களைத் தோழி சொல்லக் கேட்டுக் கொண்டு, மேலே மேலே போனார்கள். பீஷ்மருடைய முறை வந்தது. அவரையும் விலக்கிவிட்டு அவர்கள் அடுத்தவரிடம் சென்றார்கள்.

பீஷ்மருக்குப் பெரிய கோபம் ஏற்பட்டது. 'மகாவீரனாகிய என்னையும் ஒதுக்கி விட்டு, இவர்கள் வேறு யாரையோ தெரிவு செய்யப் போகிறார்களா!' என்று நினைத்துக் கடும் கோபம் கொண்டார். உடனே எழுந்து, "இந்தப் பெண்களை அழைத்துச் செல்லக் கூடிய வலிமையுள்ளவர்கள் யாராவது இருந்தால் வாருங்கள் சண்டைக்கு!" என்று உரத்த குரலில் கூறினார்.

பீஷ்மருடைய திறமையைத் தெரிந்திருந்த பல அரச குமாரர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள். ஆயினும் சிலர் அரச குமாரர்களுக்குரிய வீரத்தோடு பீஷ்மருடன் சண்டைக்கு எழுந்தார்கள். அவர்களையெல்லாம் மிகச் சுலபமாகத் தோற்கடித்து விட்டு, மூன்று அரச குமாரிகளையும் தேரில் ஏற்றிக் கொண்டு, தமது நகராகிய அஸ்தனாபுரம் நோக்கிப் புறப்பட்டார் பீஷ்மர்.

பீஷ்மருடன் கடுமையாகச் சண்டையிட்டுத் தோற்றுப் போனவன் சால்வன் என்ற மன்னன். சுயம்வரத்துக்கு வந்த பெண்களில் மூத்தவளான அம்பையை ஏற்கனவே காதலித்திருந்தவன். அம்பையும் அவனையே விரும்பியிருந்தாள்.

சால்வன் மனம் பொறுக்காமல், பீஷ்மர் சென்ற தேரைத் தொடர்ந்து சென்று சண்டையிட்டான். ஆனால் பெரிய வீரனாகிய பீஷ்மரை அவனால் வெற்றி கொள்ள முடியவில்லை. ஒரு சமயத்தில் அவனைக் கொல்வதற்குப் பீஷ்மர் தயாரானார். ஆனால் தேரில் இருந்த மூன்று பெண்களும், முக்கியமாக அம்பையும் மிக இரந்து கேட்டதனால் பீஷ்மர் சால்வனைக் கொல்லாமல் விட்டு விட்டார்.

மூன்று பெண்களோடும் அஸ்தனாபுரம் வந்து சேர்ந்த பீஷ்மர் அவர்களை விசித்திர வீரியனுக்குத் திருமணம் செய்து வைக்க ஏற்பாடுகள் செய்தார்.

---

## ★ வரதர் ★

இதை அறிந்த மூத்தவளான அம்பை துணிச்சலுடன் பீஷ்மரிடம் சென்று 'கங்கா புத்திரரே! நான் சௌபல நாட்டு மன்னரான சால்வனையே எனது மணாளனாக நெடுநாளாய் என் மனதில் கருதியிருக்கிறேன். நீங்களோ பலாத்காரமாக என்னை இங்கே கொண்டு வந்து விட்டீர்கள். எல்லா அறங்களையும் அறிந்தவராகிய உங்களுக்கு இது தகுமா?" என்று நியாயம் கேட்டாள்.

அம்பையின் நியாயத்தைக் கேட்ட பீஷ்மர் அவள் விருப்பத்தை ஏற்று, அவளைச் சால்வனிடமே தக்க துணையுடன் அனுப்பி வைத்து விட்டார்.

அம்பையின் தங்கைகளான அம்பிகை அம்பாலிகை இருவருக்கும் விசித்திர வீரியன் மாலை சூட்டி அவர்களைத் தனது மனைவியராக்கிக் கொண்டான்.

## அம்பை

அம்பை சால்வ மன்னனிடம் சென்று "உங்களையே நான் எனது கணவராக மனதில் கருதியிருந்தேன். பீஷ்மர் பலாத்காரமாக என்னைக் கொண்டு சென்றார். ஆனாலும் அறிவு நூல்களைக் கற்றவராகிய பீஷ்மரிடம் நான் எனது நிலையை எடுத்துக் கூறி நியாயம் கேட்டதும் அவர் என்னை உங்களிடமே போகும்படி அனுப்பி விட்டார். என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றாள்.

சால்வனோ "பல மன்னர்கள் முன்னிலையில் பீஷ்மர் என்னைத் தோற்கடித்து உன்னைக் கொண்டு சென்றார். உன்னை நான் திரும்பப் பெறுவது மானக் கேடாகும். உன்னைப் பீஷ்மரே வென்றெடுத்தவர், அதனால் நீ அவருக்கே உரியவள். நீ அவரிடம் சென்று அவர் சொற்படி நட. நீ என்னுடன் சேருவது இந்தப் பிறவியில் நடவாது!" என்று கூறி அம்பையைப் பீஷ்மரிடமே திருப்பி அனுப்பி விட்டான்.

அம்பை மனம் உடைந்து போய் மீண்டும் பீஷ்மரிடமே வந்து சால்வனின் முடிவைக் கூறினாள்.

பீஷ்மரின் மனம் பெரிய சங்கடப்பட்டது. அம்பை சொன்னதும் நியாயம் சால்வன் சொன்னதும் நியாயமாகப்பட்டது.

அவர் விசித்திர வீரியனை அழைத்து "சால்வன் அம்பையை ஏற்கவில்லை, எனவே நீ இப்போது இவளைத் திருமணம் செய்வதில் தடையொன்றுமில்லையே?" என்று கேட்டார்.

விசித்திர வீரியனோ, "வேறு ஒருவன் மீது தனது மனதைப் பறிகொடுத்த பெண்ணைத் திருமணம் செய்வது அரச குல வீரனுக்கு அழகல்ல!" என்று கூறி மறுத்து விட்டான்.

பாவம் அம்பை! அவளது நிலை மிகவும் இரங்கத்தக்கதாக இருந்தது. "கங்கா புத்திரரே, எனக்கு இனி வேறு கதியில்லை. நீங்களே என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்னுடைய தந்தையின் பாதுகாப்பிலிருந்து நீங்களேதான் என்னை எடுத்து வந்தீர்கள். என்னுடைய வாழ்க்கைக்கு நீங்கள்தான் வழி செய்ய வேண்டும்!" என்று அம்பை பீஷ்மரிடம் இரந்தாள்.

பீஷ்மர் சரியான தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டார். அம்பை கேட்பது நியாயமே ஆனாலும், உலகம் முழுவதும் அறிய, செம்படவத்தலைவனுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீற முடியுமா? அந்த வாக்குறுதியை அவர் அம்பைக்கு நினைவுபடுத்தி, அவளுடைய வேண்டுகோளை ஏற்க மறுத்துவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பையும் சரியான பிடிவாதக்காரி 'எனக்கு ஒரு வழிகாட்டா விட்டால் நான் இங்கிருந்து போகமாட்டேன்' என்று பீஷ்மரின் அரண்மனையிலேயே பழி கிடந்தாள்.

பீஷ்மர் அவளுக்குப் புத்தி சொல்லி மறுபடியும் சால்வனிடம் அனுப்பி வைத்தார். சுவரில் எறிந்த பந்து போல் அவள் மீண்டும் பீஷ்மரிடமே வந்து சேர்ந்தாள்.

இப்படி ஆறுமாதங்களாக அம்பை பீஷ்மரின் மாளிகையில் குமுறிக் கொதிக்கும் இதயத்துடன் காத்திருந்தாள்.

எவ்வித பயனும் கிடைக்கவில்லை. அவள் பொறுமை இழந்தாள். தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவர் பீஷ்மரே என்று நினைத்துப் பொருமினாள். அவரைக் கொன்றால்தான் தனது மனதுக்கு ஆறுதல் கிடைக்குமென்று அவளுக்குத் தோன்றிற்று.

அம்பை பல மன்னர்களிடம் சென்று தனக்கு நேர்ந்த கதியை எடுத்துக் கூறி பீஷ்மருடன் போரிட்டு அவரைக் கொன்று நீதியை நிலைநாட்டும்படி கேட்டாள்.

நியாயம் அவள் பக்கம் இருப்பதை எல்லா மன்னர்களும் ஒத்துக் கொண்டாலும், பீஷ்மருடன் பகை கொள்ள அஞ்சி அவளுடைய வேண்டுகோளை அவர்கள் மறுத்து விட்டனர்.

அடங்காத மனக் கொதிப்புடன் அம்பை முருகனை நோக்கித் தவமிருந்தாள். முருகன் அவள் முன் தோன்றி அவள் கையில் ஒரு மாலையைக் கொடுத்து "இந்த மாலையை எவன் தரித்துக் கொள்கிறானோ அவன் பீஷ்மரின் எதிரியாவான்" என்று ஒரு வரத்தைக் கொடுத்து மறைந்தார்.

அம்பை அந்த மாலையை எடுத்துக் கொண்டு மீண்டும் பல மன்னர்களிடம் சென்று, அந்த மாலையை அணிந்து சென்று பீஷ்மரைக் கொல்லும்படி வேண்டினாள். அப்போதும் எந்த மன்னனும் பீஷ்மரை எதிர்க்கத் துணியவில்லை. கடைசியாகத் துருபத நாட்டு மன்னனிடம் போய்க் கேட்க, அவனும் மறுத்துவிடவே அம்பை மனமுடைந்து போனாள். அந்த மாலையைத் துருபதனின் அரண்மனை வாயலிலேயே ஓர் இடத்தில் தொங்கப்போட்டுவிட்டு அவள் காட்டுக்குச் சென்றாள்.

அவள் விடாக்கண்டி. அங்கேயும் அவள் சும்மாயிருக்க வில்லை. காட்டிலுள்ள முனிவர்களிடமெல்லாம் சென்று பீஷ்மரால் தனக்குச் செய்யப்பட்ட கொடுமையைச் சொல்லி முறையிட்டாள்.

முனிவர்கள் "பெண்ணே, உனக்கு உதவக் கூடியவர் பரசுராமர் ஒருவர்தான் அவரிடம் போய் முறையிடு" என்று புத்தி சொன்னார்கள்.

அம்பை பரசுராமரிடம் சென்று முறையிட்டாள். அவளுக்கு நீதி செய்யப்பட வேண்டியதை பரசுராமர் உணர்ந்தார். "பெண்ணே, நீ சொல்வது நியாயமே. நான் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று சொல். சால்வ மன்னன் உன்னைத் திருமணம் செய்யும்படி ஒழுங்கு செய்யட்டுமா? சொல். அது என்னால் முடியும்" என்றார்.

பரசுராமர் வில்வித்தையில் பெரிய வீரர். அரச குலத்திற்கே எதிரி. முன் கோபி. ஆனால் நியாயம் தவறாதவர்.

பரசுராமரின் வார்த்தைகளால் சற்றே மனம் ஆறிய அம்பை வணங்கத் தக்கவரே, நீங்கள் ஒருவரே நீதிக்காக எவரையும் எதிர்கொள்ளத் துணிந்து நிற்கக் கூடிய பெரியவீரர்! எனக்கு இனித் திருமணம் வேண்டாம். அந்த ஆசையெல்லாம் இப்போது போய்விட்டது! எனக்குத் தீங்கு செய்த பீஷ்மர் தண்டிக்கப்பட வேண்டும். அதையே நீங்கள் செய்து இந்த உலகில் நீதியை நிலை நாட்ட வேண்டும்!" என்று கேட்டாள்.

எவருக்கும் அஞ்சாத பரசுராமர், பீஷ்மருடன் சண்டை செய்தார். பல நாட்களாகச் சண்டை நடந்தது. இருவரும் சிறந்த வீரர்கள். ஆயினும் பரசுராமர் கடைசியில் தோற்றுப் போனார்.

"பெண்ணே, என்னால் முடிந்ததை நான் செய்து விட்டேன். பயனில்லை. நீ இனிப் பீஷ்மரைச் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை" என்று பரசுராமர் அம்பையிடம் சொன்னார்.

சரணடையக் கூடிய பெண்ணல்ல அம்பை! இதற்குமேல் என்ன வழி என்று அவள் சிந்தித்தாள் எப்படியும் பீஷ்மரைப் பழிவாங்காமல் அவள் ஓயமாட்டாள்!

அம்பை இமயமலைச்குச் சென்று சிவபிரானைக் குறித்துக் கடுந்தவம் இயற்றினாள்.

(தொடரும்)

# 'கார்' கடிதம்

"அன்பே!

நேற்று மாலை தெருவில் நாம் சந்தித்துக் கொண்டோம்!

என்னை நீ திரும்பித் திரும்பிப் பார்த்ததை நானும் கவனித்தேன்!

உன்னைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன். நீயும் என்னைப் பற்றி அறிய ஆசைப்படுவாய்!

நாம் இருவரும் ஒரு முறை சந்தித்துக் கொண்டால், எவ்வளவு இனிமையாக இருக்கும்!

நீ எனக்காகவே பிறந்தவள். நான் உனக்காகவே பிறந்தவன்.

ஒரு சில நிமிடம் உன்னைச் சந்திக்க விரும்புகிறேன். நளை மாலை சந்திக்கலாமா?

—இப்படி ஒரு கடிதம் ஒரு பெண்ணுக்கு வந்தால் அவள் என்ன செய்வாள்?

ஒரு பெண்ணுக்கு அல்ல; ஐம்பதாயிரம் பெண்களுக்கு இந்தக் கடிதம் வந்தது!

கடிதம் கிடைத்த அத்தனை பெண்களும் அதிர்ந்து போனார்கள்!

பல பெண்கள் வெட்கத்தால் வீட்டைவிட்டு வெளியே வரவில்லை.

சில கணவன்மார்கள் தங்கள் மனைவிகளுக்கு வந்த கடிதங்களைப் படித்து ஆத்திரமடைந்தனர்.

வேலைக்குப் போகும் பெண்கள் துணைக்கு ஆட்களை அழைத்துப் போனார்கள்.

இப்படி ஊரையே கலக்கியது அந்தக் கடிதம்.

துரு துருவென விழித்த பெண்களுக்கு ஒரு வாரம் கழித்துத்தான் உண்மை தெரியவந்தது.

அது காதல்கடிதம் அல்ல: 'கார்' கடிதம்.

'பியட்' கார் நிறுவனம் ஸ்பெயின் நாட்டில் புதிய மகளிர் கார்களை அறிமுகப்படுத்தியிருக்கிறது. அதற்கான அறிமுகக் கடிதம்தான் அது. இதற்குப் பெண்கள் சங்கங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. அதன் பேரில் மேலும் அனுப்ப இருந்த அழகாக அச்சிட்ட 50 அயிரம் கடிதங்களையும் பியட் நிறுவனம் எரித்துச் சாம்பல் அக்கிவிட்டது.

# நாயுருவி

தேள் கடித்தாலும் சரி, கொட்டினாலும்சரி கிராமத்திலுள்ளவர்கள் நாயுருவி வேரை வாயில் போட்டு மென்று சாற்றைக் குடித்து விட்டால் தேளின் விஷம் உடம்பில் பரவாது என்று சொல்கிறார்கள் நாயுருவி என்ற ஒரு செடி பாதை ஓரங்களில் தன்னிச்சையாய் வளர்ந்து கிடப்பதைப் பார்க்கலாம். நாய் மேய்ந்து திரிந்து ஓடும் போது அதிலுள்ள முள் போன்ற விதைகள் நாயின் மீது பற்றிக் கொள்ளும். எனவே இதை நாயுருவி என்று அழைக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனம்!

"மாட்டையடித்து வசக்கித் தொழுவினில் மாட்டும் வழக்கத்தைக்கொண்டுவந்தே, வீட்டினில் எம்மிடம் காட்டவந்தார், அதை வெட்டிவிட்டோமென்று கும்மியடி!" என உறுமினான் பாரதி.

ஆனால் அந்த வழக்கம் இன்றும் பொறி தட்டுவதே வேதனைக்குரியது. 'சீதனம்' என்னும் ஏலத்தில் பெண் கொள்வனவாளியாக இருந்த போதிலும் விற்பனைச் சரக்கைப்போல் அடிமையாகிப் போகின்ற நிலை விசனத்திற்குரியது.

அறிவிருந்தும், அழகிருந்தும், தகுதியிருந்தும் திருமண வயதையடைந்த பல ஏழைப் பெண்களின் வாழ்வு 'சீதனம்' எனும் அசுரனால் சிதைக்கப்பட்டு, பொலிவிழந்து அவர்களின் கண்ணீர் காவிரியாய்ப் பாய்வது சமூகத்தின் செவிகட்கு எட்டாத செய்தியல்ல.

ஆணாயும் பெண்ணாயும் உயிரினங்கள் அவதரித்தல் இயற்கை நியதி. அவையிரண்டும் இணைந்து சந்ததி வளர்த்தலும் இயற்கை நியதியே. சமூகமாய் கூட்டமாய் கூடி வாழுதல் மனிதனுக்குமட்டுமல்ல விலங்குகட்கும் உரிய வழக்கம். ஒருத்தனுக்கு ஒருத்தியென்ற உயர்ந்த பண்பு மனிதனிடம் அருகிவருகின்ற போதும் புறாக்களிடம் உண்டாம்.

ஆனால் 'சீதனம்' எனும் மார்க்கம் மாத்திரம் மனிதனைத்தவிர ஏனைய விலங்குகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

'சீதனம்' என்பது பெண்ணடிமைத்தனத்தின் எச்சம் என்பதை மறுக்க முடியாது. தமிழீழத்திலும் தென்னிந்தியாவிலேயே (தமிழகம்) இந்நிலை தீவிரமாய் உள்ளது. குறித்தளவை சீதனமாகக் கொண்டுவராத பெண்களையும், இடையிடையே பண்டிகைக் காலங்களிலும், பிள்ளைப் பேற்றுக் காலங்களிலும் பிறந்த வீட்டிலிருந்து பணம் பெற முடியாதவர்களையும் கொடுமைப்படுத்துகின்ற சம்பவங்களும், அக்கொடுமை கொலையாக எல்லை மீறும் சம்பவங்களும் தென்னிந்தியாவில் இன்றைய நிதர்சன நிகழ்வுகள்.

இதனால் பெற்றோர்கள் பெண் பிள்ளைகளை அடியோடு வெறுக்கின்ற மனோபாவமும், பத்துமாதம் சுமந்து தான் பெற்ற சிசுவை தாயே கொல்லுகின்ற துரதிர்ஷ்டமான சூழ்நிலையும் தென்னிந்தியாவில் தீவிரமாகிவிட்டன. இந்த நிலையைவிட்டு தமிழ்சமூகம் தலைகுனிய வேண்டியுள்ளது. இத்தகைய துரதிர்ஷ்டமான போக்குகள் எமது பிரதேசங்களை யண்டிவிடாதிருக்க சீதனத்தை முளையிலேயே இளங்கன்றிலேயே கிள்ளியெறிந்து விடுதல் அவசியமாகும்.

துணைவியூரான்,

இப்பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் முகமாகவே 'சீதன ஒழிப்புச் சட்டம்' அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. சீதனம் வாங்குதல்' தொடர்பான நடைமுறைகளில் மிகக் கடுமையான தண்டனைகளை வழங்க இச்சட்டம் வழிவகுக்கலாம். இச்சட்டம் காரணமாக சீதனநடை முறை ஒழிக்கப்பட்டுவிட வேண்டும். ஆனால் 'சட்டம்' மட்டுமே பிரச்சனையைத் தீர்த்துவிடப் போதுமானதொன்றில்லை. பிரச்சாரமும், அதன் மூலம் மக்கள் மத்தியில் ஏற்படக் கூடிய மனமாற்றமும், இளம்பெண்களின் மனவுறுதியுமே 'சீதனம்' எனும் சாக்கடையை சீராக்க உதவக் கூடியது.

இன்றைய நிலையில் சீதனம் வழங்குவதென்பது ஒரு சமூக கௌரவமாகக் கருதப்படுகின்ற நிலையுள்ளது. சீதனம் வாங்குவது மட்டுமல்ல, சீதனம் கொடுப்பதையே ஒரு கௌரவமாக, குடும்ப அந்தஸ்தாக நினைக்கின்ற பெற்றோர்களும் எம்மிடையேயிருக்கிறார்கள்.

இத்தகைய மனோநிலை மாறவேண்டும் படித்து பட்டம் பெற்று, உயர்பதவியிலிருந்தும், தன் காலில் உறுதியாக நிற்கவேண்டிய ஆண் சமுதாயம், குடும்பத்தலைவன் என்று மார்தட்டி மணப் பெண்ணை ஏற்றுக்கொள்கின்ற ஆண்சமுதாயம் ஏன் அவளிடம் கையேந்தி நிற்க வேண்டும்?

இவர்கள் என்ன கௌரவமான பிச்சைக்காரரா? அல்லது தங்கள் காலில் உறுதியாக நிற்க முடியுமென்ற சுய நம்பிக்கையற்றவர்களா? இல்லை இப்படிச் சிந்திக்க யாரும் முன்வருவதில்லையென்பதே உண்மை. சீதனம் வாங்குவதைத் தம் கௌரவமாகவே இவர்கள் கருதுகின்றார்கள் "நான் பத்துலட்சம் சீதனம் வாங்கினேன்" என மார்தட்டும் பலரைத்தானே இன்று காண்கின்றோம்.

"என்பிள்ளைக்கு பத்து லட்சம் சீதனம் கொடுத்து மாப்பிள்ளை எடுத்தேன்" என பெருமைப்படும் பெற்றோர்களும் இல்லாமலில்லைத்தானே?

இது சமூகத்தில் ஆழமாகப் புரையோடிப் போய்விட்டதொரு பிரச்சினை. இப்பிரச்சினை தொடர்பாக அடிப்படை ரீதியானதொரு மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டியது அவசியமாகின்றது.

சீதனப் பிரச்சினையில் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள் என்பதனை ஏற்றுக் கொண்டாலும் இதனால் ஆண்கள் பாதிப்படைவதில்லையெனக்கூறமுடியாது.

பெண் பிள்ளையிரண்டு பிறந்துவிட்டாலே தந்தைக்கு 'சுமை'யேறிவிடுகிறது. சகோதரிகள் சிலருடன் பிறந்துவிட்டாலே தமையனுக்கு 'சுமை'யேறிவிடுகிறது. சகோதரிகள் சிலருடன் பிறந்துவிட்ட குற்றத்திற்காக 'செக்குமாடாக' உழைத்து அவர்கட்கு சீதனம் தேடி தன்வாழ்வை தியாகிக்கும் இளைஞர்கள் எம்மத்தியில் இல்லையா? பெண்பிள்ளைகளோடு பிறந்துவிட்டால் சிறுவயது முதலே 'உனக்குப் பொறுப்பிருக்கடா... பொறுப்பிருக்கடா' என்று கூறிக் கூறியே இளமை வாழ்வை இனிதாகக்கழிக்க முடியாது.

பார்க்கப் போனால் சீதனத்தால் அதிகப்பட்சம் பாதிப்படைவது ஆண்சமுதாயம் போலல்லவா ? இருக்கிறது. நிலைமை இவ்வாறிருக்க'சீதன ஒழிப்பிற்கு' தோள் கொடுக்க ஆண்சமுதாயம் ஏன் முன்வரக்கூடாது?

செல்வச் செழிப்பிலே வாழும் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு சீதனம் கொடுப்பதை பெருமையாகக் கருதப்படக் கூடாது. தம் செல்வச் செழுமை காரணமாக திருமணச்சந்தையில் இவர்களின் குரல் ஓங்கியொலித்து ஏலம் கேட்டால் இங்கே கீழ்மட்டத்துப் பெண்களின் பெருமூச்சுகளுக்கு இவர்களும் காரணமாகி விடுவார்கள்.

எனவே இந்த மனோநிலை மாறவேண்டும். இது மட்டுமல்லாமல் இளம் பெண்கள் சீதனவிடயத்தில் மிகவும் உறுதியானவர்களாக இருக்கவேண்டும். சீதனம் வாங்காத ஆடவனைத் தான் மணப்பேன் என இலட்சிய உறுதியோடு வர்க்க பேதமின்றி மனமாற்றங்களும் உறுதியான நிலைப்பாடுகளும் 'சீதன ஒழிப்புச் சட்டத்தோடு' கைகெடுப்பின் சீதனமற்ற இலட்சிய சமுதாயத்தை உருவாக்குவது அவ்வளவு கடினமான காரியமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதாத எழுத்தாளன் எழிலன்

எழுதுவதென்பது அப்படி ஒன்றும் பாரதூரமான காரியமில்லை. நாலு புத்தகத்தை வாசித்து விட்டு, அதிலை ஒரு நுள்ளு, இதிலை ஒரு கிள்ளு, அடுத்ததிலை ஒரு அள்ளு இப்படியாக எடுத்தெடுத்து எழுதி விட்டுக் கையெழுத்தைப் போட வேண்டியது தான், எழுத்தாளனாகி விடலாம்.

இப்படி இல்லாவிட்டால் அவன் பேசுவது, இவன் பேசுவது, அங்கை நடப்பது, இங்கை நடப்பது இப்படியான சம்பவங்களை எல்லாம் செருகிக் கதை கட்டுவது பெரிய காரியமோ?

சுருக்கமாகச் சொல்வதாயிருந்தால் சைக்கிள் கடை மணியத்தின் வேலையைப் போலத் தான் இந்த எழுத்தாளர்களின் வேலையும்! அவனும் ஊர் ஊராகத் திரிந்து ஒரு 'பார்' எடுத்திட்டால் போதும் பிறகு அங்கை ஒரு சில்லு, இங்கை ஒரு சில்லு, அடுத்த வீட்டிலை ஒரு 'மக்காட்' எதிர் வீட்டிலை 'செயின் கவர்' இப்படியாகச் சேர்த்து ஒரு சைக்கிள் செய்து விடுவான்.

இது தெரியாமல் இந்த எழுத்தாளர்கள் எல்லாரும் தலைகால் தெரியாமல் திரிவதும், கடவுளைக் கண்டமாதிரிப் போற்றித் திரிவதும் அர்த்தமற்றது.

இன்னும் சிலர் பேப்பரிலை எழுதினால் தான் எழுத்தாளன் என்று சொல்கிறார்கள். இது சரியான புட்டாளத்தனம். நானும் அந்தக் காலத்தில் ஏராளமாக எழுதியிருக்கிறேன். ஆனால் ஒன்று கூடப் பேப்பரிலை வரவில்லை. பேப்பருக்கு அனுப்பியதுமில்லை. அப்படியானால் என்னை எழுத்தாளன் இல்லை என்றா சொல்லுவது?

எழுத்தாளர்களுக்கெல்லாம் பத்திரிகை அலுவலகங்களில் பழக்கமான ஒருவரேனும் இருப்பார். அவர் இன்றி ஓர் அணுவும் அசையாது. எங்களுக்குப் அப்படி யாராவது இருந்தால் நாங்களும் தான் ஏராளமாக எழுதலாம்.

அங்கை பாருங்கோ வைவயளும் ,எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்' படித்தவன் பாட்டைக் கெடுத்தான் என்பது போல் ஏதேதோ பத்திரிகைகளிலெல்லாம் எழுதுகிறவையாம் எழுதட்டும். ஆனால் நான் பேசிறதை எல்லாம் கேட்டு விட்டு அதையும் கூட எழுதிப் போடுவினம் என்று தான் பயமாயிருக்கு''

மேற்படி சத்தான வார்த்தைகளை எல்லாம் திருவாய் மலர்ந்து அடிக்கடி உதிர்த்து விடுபவன் தான் எழிலன். அவன் எங்களூர் நூல் நிலையத்தின் பொறுப்பாளன். நூல் நிலயத்தில் யாராவது

**பொ. சண்முகநாதன்**

எழுத்தாளனும் இருந்து வேறு பலரும் கூடியிருந்தால் இப்படியான வசனங்களை அவிழ்த்து விடுவான்.

எழிலன் நூல் நிலையத்தின் பொறுப்பாளனே தவிர அவ்வளவாக நூல் அறிவு நிரம்பியவனல்ல அவன் எழுதுவது ஒரு திறமை என்பதையோ எழுத்தாளன் என்பவன் ஓர் உயர்ந்த பிறவி என்பதையோ இலேசில் ஒப்புக் கொள்ள மாட்டான். தன்னால் முடியாத ஒரு கலை 'தன்னால் நுழைய முடியாத ஒரு துறை எப்பொழுதும் 'மகாமட்டமானதே' என்பது அவனது எண்ணம்.

இரண்டொரு எழுத்தாளர்கள் அந்த நூல் நிலையத்தில் அடிக்கடி புத்தகங்கள் எடுப்பதை வைத்துக் கொண்டு எழுத்தாளர்கள் புத்தகங்களைப் பார்த்துத் தான் எழுதுகிறார்கள் என்றும் தனது நூல் நிலையமும் தானும் இல்லாவிட்டால் அந்த எழுத்தாளர்கள் எழுதவே முடியாது என்றும் உண்மையாகவே எழிலன் எண்ணிக் கொண்டிருக்கிறான்.

பத்திரிகையில் எழுதுவதற்குத் தகுதி தேவையில்லை. எப்படியும் எழுதலாம். எதையும் எழுதலாம். ஆனால் அது பிரசுரமாவதற்குப் பத்திரிகை அலுவலகங்களில் பழக்கமான யாராவது ஒருவரேனும் இருந்தே ஆகவேண்டும் என்பதும் எழிலனின் எண்ணம்.

முடிவாக எழிலன் ''உண்மையான எழுத்தாளன் என்றால் அவன் எழுதமாட்டான் இப்படியாக யோசித்தபடிதான் இருப்பான். எப்போதாவது தான் எழுதுவான். அதையும் பத்திரிகைக்கு அனுப்பமாட்டான் என்று நிமிர்ந்து கைகாட்டியவாறு சொல்லுவான்.

தன்னால் முடியாத தொன்று மற்றவர்களால் முடிவதைப் பொறுக்க மாட்டாத எழிலனிடம் நூல்களிலிருந்து எடுத்து எழுதுவது திருட்டு என்றும் திருடி எழுதினால் கண்டு பிடிக்கப்பட்டு அவமானப்பட வேண்டுமென்றும், நீ ஏதாவது கதை, கட்டுரை எழுதித்தா எப்படி இருக்கிறது பார்ப்போம் என்றும், யாராவது கூறினால் அதற்கெல்லாம் கூட விதண்டாவாதமான பதில்கள் சொல்லுவான்.

நேற்றைய தினம் இந்த எழுதாத எழுத்தாளன் பலர் மத்தியில் வலிந்து கதைக்கப்போய் சரியாக மாட்டிக் கொண்டான்.

நூல், நிலையத்தில் நான் திருவாசகம் என்ற நூலைக் கொண்டு வெளியே வந்ததும் ''திருவாசகம் போகிறது. இனி இதிலிருந்து கதை கட்டுரைகள் எல்லாம் தயாரிப்பார்'' என்றான் எழிலன்.

உடனே அங்கு நின்ற பலர் ''சிறு கதைகளும் நகைச்சுவைக் கட்டுரைகளும் தானே அவர் எழுதி வருகிறார். சிறு கதைகளும், நகைச்சுவைக் கட்டுரைகளும் திருவாசகத்திலிருந்து எப்படி எடுத்து எழுதுவதாம்? அப்படித் தான் எடுத்து எழுதினாலும் போயும் போயும் பொலீஸ் நிலையத்தில் களவெடுத்த கதையாகவல்லவா முடியும்.'' என்று எழிலனுடன் காரசாரமான விவாதம் தொடங்கி விட்டனர்.

இறுதியில் எழிலன் தனது தோல்வியைத் தற்காலிகமாக ஒப்புக் கொண்டான். ''ஏதோ எழுதுங்கோ. எழுதுவதில் குறை ஒன்றும் இல்லை. படிப்படியாகத்தான் வளர வேண்டும். முதலில் அறையில் ஆடித்தான் பிறகு அம்பலத்தில் ஆட வேண்டும்'' என்றான்.

## மெலிந்தது ............

உடல் பருத்த ஒரு பணக்காரப் பெண்மணி ஒரு டாக்டரை அணுகி உடல் எடையைக் குறைக்க அறிவுரை கேட்டாள். அந்த அம்மையார் தினமும் அரைமணி நேரம் குதிரைச் சவாரி செய்வது நல்லது என டாக்டர் கூறினார். அந்தப் பணக்காரி டாக்டர் கூறியபடி தினமும் காலையிலும் மாலையிலும் அரை மணி நேரம் குதிரைச் சவாரி செய்தாள் ஒரு மாதம் கழித்து டாக்டரிடம் வந்தாள்.

''எப்படி உடம்பு உள்ளது''?

''குதிரை நல்லாக மெலிந்து விட்டது டாக்டர் என்றாள் அப்பெண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மத்தியில் -

# மொழி வறுமை முதலில்!

யாழ் இந்துக் கல்லூரி அதிபர் பஞ்சலிங்கம் அண்மையில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

நல்ல கட்டுரை.

'ஈழநாதம்' வெள்ளி மஞ்சரியில் வெளிவந்திருந்தது.

சமகாலப் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு சமூகப் பிரக்ஞையுடன் எழுதப்பட்டிருந்தது.

அதிபர் பஞ்சலிங்கம் எழுதியிருப்பது போல இன்றைய பிரச்சினைகளை இங்குள்ள மக்கள் அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் பல கட்டுரைகள் வெளிவர வேண்டும்.

அப்போது தான் —

கல்வி மக்கள் மயப்படும்!

மக்கள் மயப்பட்ட நிலையிலேதான் கல்வி உலகில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட முடியும்.

### அண்மைக் காலத்தில் தரம் வீழ்ச்சி

எமது மாணவர்களின் கல்வித் தரம் பற்றி கவலை தரும் செய்திகள் வெளிவந்து கொண்டு இருப்பது உண்மை!

உடனடியாக சில அவசர நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் நிலைமை மிகவும் மோசமாகி விடும் என்பதும் உண்மை!

தமிழ் ஈழத்தின் மிகப் பெரிய வளம் நமது மாணவர்கள் தான்! இந்த வளத்தை செம்மையாகப் பேணி வளர்த்தெடுக்க வேண்டியது முழுச் சமூகத்தினதும் கடமை!

### ஏணியில் ஒரு கால் தோணியில் ஒரு கால்

''நமது கல்வித்துறையினரில் பலர் ஏணியில் ஒரு காலும் தோணியில் ஒரு காலுமாக நிற்கிறார்கள்! ஏணி பதவி உயர்வு பெறுவதற்கு! தோணி நாட்டை விட்டு ஓடுவதற்கு!

இவர்களை மட்டுமே நம்பியிருந்தால் கல்வி வளம் பெருகும் என்று எதிர் பார்க்க முடியாது!

### சிறிலங்கா அரசின் சுற்றறிக்கைகள் பயன் தராது

இது போர்க்காலம்! இக்காலத்துக்கு ஏற்ற முறையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

**சுகுமாரன்**

சிறிலங்கா அரசின் சுற்று நிருபங்களை அப்படியே கடைப்பிடித்து நமது மாணவர்களின் கல்வியை விருத்தி செய்யலாம் என்று நம்பினால் அது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதையாகவே முடியும்.

### இறக்குமதி செய்யக்கூடிய சரக்கு அல்ல

கல்வி நடைமுறைகள் என்பன இறக்குமதி செய்யக் கூடிய சரக்குகள் அல்ல - Educational Practices are not Importable Commodities - என்பது அடிப்படையான ஒரு தத்துவம்.

இந்த அடிப்படைக் கருத்து புறக்கணிக்கப்பட்டது தான் நமது மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருவதற்கு முதற் காரணம்!

கல்வி நடைமுறைகளை ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு இறக்குமதி செய்ய முடியாது.

ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்திற்கு இறக்குமதி செய்ய முடியாது.

ஒரு பாடசாலையிலிருந்து இன்னொரு பாடசாலைக்கு இறக்குமதி செய்ய முடியாது.

ஒரு வகுப்பறையிலிருந்து இன்னொரு வகுப்பறைக்குக் கூட இறக்குமதி செய்ய முடியாது!

மாணவர்களின் தேவைகள், ஆர்வங்கள், விருப்புகள், வெறுப்புகள், அவர்கள் வசிக்கும் சூழல், முதிர்வு என்பனவற்றுக்கு ஏற்பவும், அவர்களது முந்தைய கற்றல் அனுபவத்திற்கு ஏற்பவுமே அவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி அமைய வேண்டும். அப்போது தான் மாணவனுக்கு பயன் தரும் கல்வியாக அது அமையும்!

### தோல்வியுடன் வெளியேறும் மாணவர்!

பெரும்பான்மையான நமது பாடசாலைகளில் ஒவ்வொரு ஆண்டிலும் பயிலும் மாணவர்களை திறமை அடிப்படையில் தர வாரியாகப் பிரித்து வெவ்வேறு 'டிவிஷன்'களில் வைத்திருக்கிறார்கள்.

இப்படித் 'தரம்' பிரித்த பின்னர் 'கெட்டிக்கார' மாணவர்களுக்கு போதிக்கப்படும் அதே பாடத்திட்டம் தான் போதனை முறையில் கூட மாற்றம் எதுவுமின்றி 'மக்கு' மாணவர்களுக்கும் போதிக்கப்படுகிறது!

இதன் பயனாக —

'ஒன்றும் தெரியாத' மாணவன் பல வருடங்கள் பள்ளிக் கூடத்தில் வாழ்க்கையை வீணாக்கிய பின் 'ஒன்றுமே தெரியாத' மாணவனாகவே எல்லாப் பாடங்களிலும் பரீட்சையில் தோல்வியடைந்து பாடசாலையை விட்டு வெளியேறுகிறான்.

### ஒன்றுமே தெரியாமல் ஆறாம் ஆண்டில் சேர்ந்து ...

ஒரு பாடசாலையில் வருடத் தொடக்கத்தில் ஆறாம் ஆண்டில் புதிய மாணவர்களைச் சேர்த்தார்கள்.

சுற்று வட்டாரத்திலுள்ள ஆரம்ப பாடசாலைகளிலிருந்து விண்ணப்பித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்க வேண்டும்

அத்தனை மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்!

ஆனால்

அப்படிச் சேர்ப்பதற்கு முன்னர் அவர்களுக்கு தமிழ், கணிதம் ஆகிய இரண்டு பாடங்களிலும் ஒரு பரீட்சை வைத்தார்கள்.

இரண்டு பாடங்களுக்குமே மிகவும் எளிதான கேள்வித்தாள் கொடுக்கப்பட்டது.

அப்படிக் கொடுக்கப்பட்டும், முப்பது மாணவர்களுக்கு மேல் இரண்டு பாடங்களிலுமே "சைபர்" மார்க்தான் எடுத்தார்கள்.

இவர்களில் பலருக்கு தங்கள் பெயரைக்கூட சரியாக எழுதத் தெரியவில்லை!

இந்த மாணவர்கள் எல்லாரும் ஒன்று சேர்க்கப்பட்டு 'மக்கு மாணவர்கள்' என்ற பட்டத்துடன் ஒரு டிவிஷனில் விடப்பட்டார்கள்!

பின்னர் அந்தப் பாடசாலையில் இவர்களுக்கு என்ன கற்பிக்கப்பட்டது?

மிகத் திறமையான 'டிவிஷன்' மாணவர்களுக்கு என்ன பாடத்திட்டம் போதிக்கப்பட்டதோ அதே பாடத்திட்டம்தான் போதனை முறையில் கூட மாற்றமின்றி இவர்களுக்குப் போதிக்கப்பட்டது!

பள்ளிக் கல்வியின் நிலைமை இப்படியாயின் பலனை எப்படி எதிர்பார்ப்பது?

ஆசிரியர்களைப் பார்த்து "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்"? என்று கேட்டால் "அதிபர் அப்படித்தான் செய்யச் சொல்லுகிறார்" என்றார்கள்.

அதிபரைக் கேட்டால் "கல்வி இலாகா அதிகாரிகள் இப்படித்தான் செய்யச் சொல்லுகிறார்கள்" என்றார்!

## பிரான்ஸ் நாட்டில் இப்படி ஒரு நிலை

பிரான்ஸ் நாட்டிலும் இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டது!

அங்கும் —

ஆறாம் ஆண்டில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் பலர் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பது தெரிந்தது.

அவர்கள் என்ன செய்தார்கள்?
உடனே அந்தப் பள்ளிக்கூடத்து ஆசிரியர்களும், அதிபரும் கல்வித் துறை அதிகாரிகளுடன் கூடிப் பேசினார்கள்.

இந்த நிலைக்கு காரணம் என்ன? இந்த மாணவர்களை எப்படி முன்னுக்கு கொண்டு வரலாம்? என்று யோசித்தார்கள்.

சும்மா பேசிக்கொண்டு இருக்காமல் சில ஆய்வுகளை மேற்கொண்டார்கள்.

அவர்களது ஆய்வின் பயனாக சில முக்கியமான முடிவுகளை தெரிந்து கொண்டார்கள்!

## மொழி வறுமை
## Linguistic Poverty

மாணவர்கள் பின் தங்கிய நிலையில் இருந்தமைக்கு அவர்கள் கண்டு தெளிந்த முதற் காரணம்! —

மொழி வறுமை!
இப்படிப் பின்தங்கிய மாணவர்கள் 'மொழி வறுமை' மிக்கவர்களாக இருந்ததோடு அவர்களது பெற்றோரும், சூழலில் இருந்த பிறரும் கூட 'மொழி வறுமை' உள்ளவர்களாகவே இருந்தார்கள்!

'மொழி வறுமை' பொதுவாக ஒரு மாணவனை எல்லாப் பாடங்களிலுமே பின் தங்கியவனாக ஆக்கிவிடுகிறது!

## அன்புக்கும் கணிப்புக்கும் ஏங்குபவர்கள்.

அந்த ஆய்வின் மூலம் அவர்கள் கண்டு தெளிந்த இரண்டாவது காரணம்.

இப்படியான மாணவர்களில் பலர் சமூகத்திலும் வீட்டிலும் 'புறக்கணிப்பு'க்கு உள்ளவர்களாக இருந்தார்கள்! அன்புக்கும் கணிப்புக்கும் ஏங்குபவர்களாக இருந்தார்கள்!

இந்த மாணவர்களுக்கு விசேட பாடத்திட்டம் வகுக்கப்பட்டு இவர்களின் மொழி அறிவு வளர்க்கப்பட்டு, இவர்கள் மீது விசேட அக்கறை செலுத்தப்பட்ட போது இவர்கள் பிரமிக்கத்தக்க அளவிலே மற்ற மாணவர்களுக்குச் சமமாக முன்னேறினார்கள்!

இப்படியான ஆய்வுகள் எங்கள் பள்ளிகளில் நடைபெற வேண்டும்! பின்தங்கிய மாணவர்களுக்கு விசேட திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்! அப்போதுதான் 'எல்லாருக்கும் கல்வி' என்ற இலக்கை அடைய முடியும்!

## 'மக்கு' மாணவர்கள்
## வாய்ப்புக்களை இழந்தவர்கள்

'மக்கு' மாணவர்கள் என்பவர்களில் மிகப் பெரும் பாலானோர் உண்மையில் அப்படியானவர்கள் அல்ல! அவர்கள் சில வாய்ப்புகளை இழந்தவர்கள்! அவர்களை தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தி 'உங்களாலும் முடியும்' என்ற தன்னம்பிக்கையை ஊட்டி அவர்களுக்குத் தெரிந்ததிலிருந்து தெரியாததற்கு (From the Known To The Unknown) இட்டுச் செல்வோமாயின் நிச்சயமாக அவர்களாலும் நன்கு கற்க முடியும்

## சமூக, பொருளாதார பிரிவுகள்

பெரும்பாலும் எல்லாப் பாடசாலைகளிலுமே 'கெட்டிக்கார வகுப்பு' என்று சொல்லப்படும் வகுப்பில் உள்ள மாணவர்களில் அநேகமானவர்கள் சமூகத்தின் 'மேல்தட்டு' வர்க்கத்திலிருந்து வந்தவர்கள்தான்!

அதுபோலவே —

'மக்கு' வகுப்பு என்று சொல்லப்படும்

(19 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீராவிக் குளத்தில் முதலை!

**வண்ணை, சே, சிவராஜா**

அன்றைய பொழுது வழமை போல் விடிந்தது! ஆனால் நீராவிக் கிராமத்தில் எங்கும் பரபரப்பு.

காரணம்?

நீராவிக் குளத்தில் முதலையொன்று காணப்பட்டதென ஊர்முழுவதும் பேச்சுக்கள் அடிபட்டன.

மாரி மழை பெய்து அயலிலுள்ள வெள்ளமெல்லாம் குளத்தினுள் பாய்ந்து குளம் நிரம்பி வழிந்தது.

நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் ர்த்தக் கேணியாக இருந்த அக்குளம் இன்று, மாரியில் ஊர் வெள்ளம் நிரம்பும் குளமாகக் காட்சியளிக்கின்றது.

வெள்ளத்தோடு அள் ளுப்பட்டு, முதலையொன்று வந்து விட்டதாக ஊர் மக்கள் பேசிக்கொண்டார்கள்.

ஒரு சிறுவன் தான் கண்ணால் முதலையைக் கண்டதாகக் கூறினான.

வேறொருவர் சுந்தரம் பிள்ளை மாஸ்டர் அம்முதலையைக் கண்டதாகவும் அம் முதலை அடிக்கடி தண்ணீருக்கு மேலே வந்து போவதாகவும் கூறினார்.

வேறொருவர் மோகன் கண்டதாகவும் 16 அடி நீள மிருக்குமெனவும் கூறினா .

வாசிகசாலைக்குப் பேப்பர் வாசிக்க வந்த சுப்பிரமணியத்தார், மனேச்சர் சின்னத்துரையர், முதலையைக் கண்டதாகவும் கூறினார்

கோவிலால் வந்த பெண் ஒருவர், கோவில் ஐயர் முந்த நாள் முதலையொன்று நீரினுள் ஓடி மறைந்ததைக் கண்டதாகக் கூறினார்.

சிலர், குளத்தில் தண்ணீர் வற்ற, முதலை ஊருக்குள் புகுந்து விடுமெனப் பயமுறுத்த ஆரம்பித்தனர்.

மேலும் சிலர் முந்திய இரவு மணியம் வீட்டு ஆடொன்றை முதலை இழுத்துச் சென்று விட்டதாகக் கூறினார்.

அன்றைய தினசரிகள் "நீராவிக்குளத்தில் முதலை! மக்கள் பீதியால் அவதி!! சிலர் வீடுகளை விட்டு வெளியேற்றம்!!!" என்ற தலைப்புக்களை தாங்கி வெளிவந்தன.

நீராவிக் கிராமம் முழுவதும் அல்லோல கல்லோலப்பட்டது. என்ன செய்வதென்று தெரியாது திகைத்தது.

குளத்தைச்சுற்றி மக்கள் கூட்டம்.

நகரசபைக்கு அறிவிக்க வேண்டுமென ஜே. பி. கூற அநேகர் அதை ஒத்துப்பாடினர்.

மாநகரசபைத் தீயணைப்புப் படையினருக்கு அறிவிக்கப்பட்டது.

டிங் டிங். டிங் என்ற இரைச்சலுடன் தீயணைக்கும் படையினரின் வாகனங்கள் இரண்டும் குளத்தை முற்றுகையிட்டன.

வந்தவர்கள் பல்வேறு வழிகளில் முயற்சி செய்து ஒன்றும் பயனளிக்கவில்லை.

மாலையாகி இருள் சூழ ஆரம்பித்தது.

'இனி இன்று ஒன்றும் செய்ய முடியாது' எனப் பலர் அபிப்பிராயப் பட்டனர்.

இளைஞர்கள் பலர் ஒன்று கூடி பெற்றோமாக்ஸ் வெளிச்சத்தில் குளத்தைக் காவல் காக்க ஆரம்பித்தனர்.

இரவில் முதலை வெளிக்கிட்டு குளத்து வாய்க்காலூடாக ஊருக்குள் புகாதிருக்க இந்த ஏற்பாடு.

அன்றிரவு!

நீராவியடியில் அநேகர் உறங்கவில்லை. பெண்களும், பிள்ளைகளும் விழித்திருந்து, முதலை வீட்டுக்குள் வந்து விடுமோவெனக் காத்திருந்தனர்.

விடிந்தது!!

நல்லகாலமாக அன்றிரவு ஒரு அசம்பாவிதமும் நடைபெறவில்லை

மீண்டும் காலையில் மக்கள் கூடி விட்டனர்.

மநகரசபைத் தீயணைக்கும் படையும் வந்துவிட்டது.

பாரிய இறைப்பு யந்திரங்களைக் கொண்டு வந்து இறைக்க ஆரம்பித்தனர்.

இளைஞர்கள் பலர் பொல்லுகள், அலவாங்குகள் முதலியவற்றுடன் காத்து நின்றனர்.

தண்ணீர் வற்றத் தொடங்கியதும்; குளத்தைச் சுற்றி நின்ற மக்களில் பலர், "இந்தா தெரியுது அந்தா தெரியுது" என அங்கும் இங்கும் காட்டினர்.

ஒரு சிலர் 'முதலை ஓடி ஒளிச்சிட்டுது' என அங்கலாய்த்தனர்.

நீர் வற்றியதும் குப்பை கூழங்கள் தெரிய ஆரம்பித்தன. மக்கள் ஆவலுடன் முதலையை எதிர்பார்த்திருந்த வேளை அவற்றிலிருந்து வெளிப்பட்டது.

ஒரு பெரிய ஆமை! O

லீலா

பிஸ்கட்டுகள் - ஒரு தமிழீழத் தயாரிப்பு!

கைதேர்ந்த தொழில் நுட்ப வல்லுநர்களால்

சிறப்பாகத் தயாரிக்கப்பட்டவை.

லீலா வெதுப்பகம், சந்தை சதுக்கம், சங்கானை.

கிளை: சிறணி, சண்டிலிப்பாய். (கு 111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனது மக்களின் விடுதலைக்காக என்ற நூலிலிருந்து —

## ஆயுதப் போராட்டமே தகுந்த வழி - ஏன்?

நான் பள்ளிச் சிறுவனாக இருந்த போது 1958 ஆம் ஆண்டில் இனக்கலவரங்களில் நிகழ்ந்த பயங்கரச் சம்பவங்கள் என் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தின. சிங்கள இனவெறியர்களால் எம் மக்கள், ஈவிரக்கமில்லாது குரூரமாகக் கொல்லப்பட்ட நெஞ்சை உலுக்கும் சம்பவங்களை நான் கேள்விப்பட்டேன். எங்கள் குடும்பத்திற்குத் தெரிந்த ஒரு விதவைத் தாயை நான் ஒரு முறை சந்தித்த போது அவர் இந்த இனவெறியாட்டத்தால் தனக்கு நேர்ந்த துயரமான அனுபவத்தை என்னிடம் சொன்னார். இனக்கலவரத்தின் போது சிங்களக் காடையர்கள் கொழும்பிலிருந்த வீட்டைத் தாக்கினார்கள். அவரது வீட்டுக்குத் தீ வைத்து, அவருடைய கணவரையும் குரூரமாகக் கொலை செய்தனர். அவரும் அவரது பிள்ளைகளும் பலத்த எரிகாயங்களுடன் தப்பினார்கள். அவரது உடலில் காணப்பட்ட எரிகாயங்களைப் பார்த்த போது நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். சிறு குழந்தைகளைக் கொதிக்கும் தாருக்குள் உயிருடன் வீசிக் கொன்ற கோரச் சம்பவங்களை நான் கேள்விப்பட்டேன். அநாதரவான அப்பாவித் தமிழர்கள் எவ்வாறெல்லாம் கொடூரமான தாக்குதலுக்கு இலக்காகினர். என்பதையெல்லாம் கேட்கும் போது என் மக்கள் மீது ஆழ்ந்த அனுதாபமும் அன்பும் ஏற்பட்டன. இந்த இனவெறி அமைப்பின் பிடிக்குள்ளிருந்து எம் மக்களை மீட்டெடுக்க வேண்டுமென்ற பெரும் உந்துதல் என்னிடம் தோன்றியது. நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கெதிராக ஆயுத வலிமையைப் பிரயோகிக்கும் இந்த அமைப்பினை ஆயுதப் போராட்டத்தின் மூலமே எதிர்கொள்ள முடியும் என்று நான் ஆழமாக உணர்ந்தேன்.

தமிழீழத் தேசியத் தலைவர்
வே. பிரபாகரன்

## களவும் கற்று மற

'ஈசன்'

களவையும் கற்று பின்னர் அக் களவை மறந்து விடுங்கள் என்று இப்பழமொழிக்குப் பொது மக்கள் விளக்கமளிப்பார்கள். இந்தப் பொருள் தமிழ்ப் பண்பாட்டுக்குப் பொருந்தவே பொருந்தாது.

திருவள்ளுவர் கல்லாமை என்று ஒரு அதிகாரமே பாடியிருக்கிறார். பிறர் பொருளை மனத்தால் கூடக் கவரவேண்டுமென்று நினைப்பது குற்றமென்கிறார். மனத்துள்ளே பேதா பேதம், வஞ்சகம், பொய்களவு, சூது, சினம் இவற்றைத் தவிர்ப்பாயாயின் செய்தவம் வேறேதுமுண்டோ என்று ஒரு அறிஞர் கடிந்துரைப்பதையும் கவனிக்க வேண்டும்.

இளைஞர்கள் அறியாமல் திருடி விட்டால் அரசாங்கம் அவர்களைச் சீர் திருத்தப்பள்ளிக்கு அனுப்புவதை நாம் அறிவோம். (இலங்கையில் மக்கோனா, அச்சுவேலி என்ற இடங்களில் இருக்கின்றன அச்சுவேலி இராணுவ ஆக்கிரமிப்பால் நடைபெறவில்லை) எனவே திருட்டைக் கற்றுக் கொண்டு மறந்துவிடு என்பது எப்படிப் பொருந்தும். களவினைக் கற்றுக் கொண்ட ஒருவன் அதனை மறக்கத்தான் முடியுமா?

திருடுவதே சிலருக்குத் தொழிலாகி விட்டது. அப்படியானால் இவ் அறிவுரை தேவைதானா? சில அறிஞர்கள் இதனைக் களவும் கத்து மற என மாற்றி திருட்டையும் பொய்யையும் மறந்து விடு எனக் கூறுகின்றனர். கத்தும் என்பதற்குப் பொய் என்று எந்த அகராதியிலுமில்லை.

தமிழ் நாகரிகத்தில் சிறப்பாக ஒருவன் ஒருத்தியைத் தான் தன் இல்லாளாக ஏற்பதென்பது இலக்கிய வழக்கு. ஒருவன் பல பெண்களை மணம் புரிவதோ, ஒருத்தி பல ஆண்களை மணந்து கொள்வதோ தமிழர் நாகரிகமும் பண்பாடும் இல்லை.

ஒரு ஆணோ, ஒரு பெண்ணோ ஒருவரைத்தான் வாழ்க்கைத் துணையாகக் கொள்ள வேண்டும் என்பது மரபு. மக்கள் எல்லாரும் ஆண் பெண் இருபாலரும் கற்பைக் கடைப்பிடிக்க வேண்டும். என்ற கொள்கையை வலியுறுத்துதற் பொருட்டே இப்பழமொழி எழுந்ததாகும் தொல்காப்பியம் அகத்திணையியலில் மக்கள் ஒழுக்காற்றைக் களவு கற்பு என இரண்டாகப் பகுத்துள்ளார்.

களவு என்பது ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தலைப்பட்டு ஒருவரை ஒருவர் சந்தித்து அன்பு கொண்டு ஒழுகுவது. அது நாளடைவில் காதலாக மாறி ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாத ஒருமைப்பாட்டுணர்ச்சி உண்டாகி, இருவரும் திருமணம் புரிந்து கொள்ள முடிவெடுப்பர்.

நீண்ட காலம் இவர்கள் பழகி வருவதைப் பெற்றோர் அறிந்து அவர்களை வாழ்க்கைத் துணைவர்களாகக் கற்பொழுக்கத்தை மேற்கொள்ளச் செய்வர். பெற்றோருக்குத் தெரியாமல் முதலில் உண்டாகும் நட்புறவை களவு என அழைப்பர். எனவே களவு முறையில் ஒரு பெண்ணைக் காதலித்தவன் மீண்டும் ஒரு பெண்ணைக் காதலிக்க முற்படக் கூடாது என்பதை வலியுறுத்தவே இந்தப் பழமொழி சொல்லப்பட்டது.

'களவும் கற்று மற'. களவு முறையில் ஒரு தலைமகனைக் காதலிப்பதையும் கற்றுக் கொண்டு பிறகு அதனை மறந்து விடு. வேறு ஒருத்தியைக் காதலிக்க நினைக்காதே என்பதே இதன் உண்மையான பொருள். இது இருபாலார்க்கும் பொருந்தும். இதைத் தான் மகாகவி பாரதியார் 'கற்பு நிலை' என்று சொல்ல வந்தால் அதை இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம் என்கிறார்.

## காரமும் தித்திப்பும்

தித்திப்புப் பண்டங்களைச் சாப்பிடும் போது சிறிது காரமும் சேர்த்துக் கொண்டால் இன்னும் அதிகமான தித்திப்புப் பண்டங்களைச் சாப்பிட முடியும். அது போல் ஜனங்கள் தங்களுடைய வாழ்க்கையில் சந்தோசத்தோடு சிறிது கஷ்டத்தையும் அனுபவித்தால்தான் இன்னும் அதிக சந்தோசத்தை அடைய முடியும்.

— ராஜாஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தன் முழுமதி வதனம் நான் கண்டது முதல் காதலானேன்.
என்னிடம் உன் கருத்தெடுத்துரைப்பாய் ........

வீட்டில் பெரியவர்கள் இருக்கும் போது
ஏட்டில் என் கருத்தெழுதிடலாமோ?

# கவி சந்திரவதி

'சித்திரா'

எல்லா நாட்டிலும் நாடோடிப் பாடல்கள் இருக்கின்றன. வங்காள தேசத்தில் "மய்மன் சிங்" பாடல்கள் பிரசித்தி பெற்றவை. இந்த மய்மன் சிங் பாடல்களில் மிகுதியாக இருப்பவை காதலும் அதன் துன்பவிளைவும் தான். ஆனால் 'திருடன் கோனா ராமின் கதை' சற்று வித்தியாசமானது. கொள்ளைக்காரன் ஒருவன் வம்சீதாஸர் என்ற பக்த கவியின் பாடல்களைக் கேட்டு மனமுருகித் தானும் சிறந்த பக்தனாக மாறிவிடுகிறான். இந்த வரலாற்றை எழுதிய ஆசிரியை வம்சீதாஸருடைய மகள் சந்திராவதி.

அவள் இலமையிலேயே மரணமானாள். அவள் வாழ்ந்த கொஞ்சக் காலத்தில் அவள் எழுதிய நூல்களின் புகழ் இன்றும் மங்காமல் ஒளி வீசுகின்றது. நிகழ்ச்சிகளை வர்ணிப்பதும் குணசித்திரம் தீட்டுவதும், தங்கு தடையற்ற எளிய நடையும் அவளுடைய கவிதையிலுள்ள சிறப்புக்கள்.

அவள் எழுதிய 'ராமாயணம்' 'திவான் பாப்னா' 'கோனாராமின் கதை' இவைகளில் இந்த அம்சங்கள் துள்ளி நடை போடுவதைக் காணலாம். சந்திராவதி தினமும் தந்தையின் பூசைக்காகப் பூப்பறிக்க அக்கம் பக்கத்துத் தோட்டத்திற்குப் போவது வழக்கம். அங்கே ஜயானந்த சக்கர வர்த்தி என்ற வாலிபக் கவிஞன் அவளுக்குப் பழக்கமானான். ஒரு நாள் இக் கவிஞன் பூவின் இதழில்

"உன்றன் முழுமதி வதனம் நான் கண்டது முதல் காதலானேன். என்னிடம் உன் கருத்தெடுத் துரைப்பாய். உன் பொருட்டு எதையும் அளித்திடுவேன்"

என எழுதி அவளிடம் கொடுத்தான்.

சந்திராவதியும் அக் கவிஞனைப் பார்த்த நாள் முதலாக அவனையே தன் கணவனாக ஏற்பதென்று முடிவு செய்து விட்டாள். ஆனால் பெற்றார், சமூகம் இவர்களுக்குக் கட்டுப்பட்டு வாழ விரும்பியதால்,

வீட்டில் பெரியவர்கள் இருக்கும் போது ஏட்டில் என் கருத் தெழுதிடலாமோ? என்று பதில் அளித்தாள்.

அவளது தந்தை ஒரு விதமாக அவள் கருத்தை அறிந்து கொண்டு அக் கவிஞனுக்கே மணம் முடிக்க இசைந்தார். சகல ஏற்பாடுகளும் நடந்தன. கவிஞனோ அந்நிய மதத்தைச் சேர்ந்த ஒரு கட்டழகியின் மேல் மோகங் கொண்டு அவளோடு ஓடிவிட்டதாகச் செய்தி.

சந்திராவதிக்கு உலகே வெறுத்தது. தன் தந்தையாரிடம் சென்றாள். தான் வாழ்நாள் முழுவதும் பிரமச்சாரிணியாகவே இருக்கப் போவதாகச் சொன்னாள். தந்தையும் அதற்குச் சம்மதித்தார். அவளுக்குத் தந்தை ஒரு சிறு கோயிலையும் கட்டிக் கொடுத்தார். தந்தையின் கட்டளைப்படி இராமாயணத்தை எளிய நடையில் எழுதி வந்தாள். சில ஆண்டுகளுக்குப் பின்னர் அந்நிய மதத்துக் கட்டழகியிடம் மோகம் தீர்ந்துவிட்டது. இனி நான் உன் அடிமை. என்று உறுதி கூறித் தன்னை மணக்கும் படி வேண்டினான். சந்திராவதி மனம் இளகினாள். தந்தையிடம் அவனுடைய வேண்டுகோளைச் சொன்னாள்.

தந்தை அவள் வேண்டுகோளை ஏற்க மறுத்து விட்டார். கவிஞன் சந்திராவதி நினைவால் அலைந்து திரிந்தான். ஈற்றில் ஆற்றில் வீழ்ந்து உயிர் துறந்தான். அவனது சடலம் ஆற்றில் மிதப்பதைக் கண்ட சந்திராவதி மனம் சஞ்சலமடைந்து மன நோயால் மாண்டு போனாள். அவள் இறந்து 400 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன.

ஆனால் இன்றும் கிழக்கு வங்காளத்தில் 'மய்மன் சிங்' என்ற இராமாயணப் பாடல்களைப் பகலில் ஓய்வு நேரங்களில் பெண்கள் பாடி மகிழ்கிறார்கள்.

# குரங்குக்குப் பஞ்சமில்லை!

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் குடியரசுத் தலைவராக இருந்த சமயம். ஒரு முறை ராஜ்யசபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவர் தலைமை தாங்கியிருந்தார். பாரத நாட்டிலிருந்து ஏராளமான குரங்குகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள் என்று ஒரு பிரச்சினை எழுந்தது. ஓர் உறுப்பினர் எழுந்து "நமது நாட்டில் இராமராஜ்யம் ஏற்பட வேண்டும் என்று பாடு பட்டுக் கொண்டிருக்கிறோம். குரங்குகள் இல்லாமல் எவ்வாறு இராம ராஜ்யம் ஏற்பட முடியும்?" என்று கிண்டலாகக் கேட்டார்.

அவர் பேச்சுக்குப் பதிலளித்த ஓர் அமைச்சர், "நம் நாட்டில் குரங்குகளுக்கு பஞ்சமில்லை. போனது போக இன்னும் ஏராளமான குரங்குகள் நம் நாட்டில் இருக்கின்றன" என்றார்.

சபைக்குத் தலைமை வகித்துக்கொண்டிருந்தராதாகிருஷ்ணன், "அமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் இருக்கும் உறுப்பினர்களைப் பற்றி அவ்வாறு பேசியிருக்க மாட்டார் என்று நான் நினைக்கிறேன்" என்று கூறினார்.

அதைக் கேட்டுச் சபையில் சிரிப்பலை எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவலியுடன் திருகுவலியும் சேர்ந்து விட்ட ஐ. தே. கட்சி அரசு!

ஐ.தே.கட்சி 17 ஆண்டுகள் ஆட்சி செய்தது போதாதென்று தொடர்ந்தும் 5 ஆண்டுகள் ஆட்சி செய்ய ஆசைப்படுகின்றது, அதற்காக சிறுபான்மை, பெரும்பான்மை மக்களைத் தன்பால் அணைத்துக் கொள்ள அவ்வப் போது சலுகைகளை, பதவிகளைக் கொடுத்து வருகின்றது.

தென்மாகாணத் தேர்தலில் ஐ.தே. கட்சி ஆடிப் போயிருக்கின்றது. அந்த ஆட்டத்தைச் சரிக்கட்ட காமினி திசநாயக்கா ஐ.தே.கட்சியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஆனால் பிரேமதாஸா குடும்பத்தை விஜேதுங்காவினால் வெற்றிகொள்ள முடியாமல் போய்விட்டது. நேரில் விஜேதுங்கா பேசியும் ஹேமாவும் அவர் குடும்பத்தினரும் ஐ. தே. கட்சியில் சேர மறுத்துவிட்டனர்.

பிரேமதாசா சாதாரண மக்களின் கண் கண்டதெய்வமாகக் கருதப்படுகிறார். தென்பகுதிக் கிராமப்புறங்களுக்குச் செல்வோர் இந்த உண்மையைத் தெரிந்து கொள்வார். தென்மாகாணத் தோல்வியின் பின்னர் சிறுபான்மையினரைச் சாடுவதை ஜனாதிபதி மெல்லக் குறைத்துக் கொண்டார். வடகிழக்கில் பயங்கரவாதம் தான் இனப்பிரச்சினை இல்லை என்றவர், ஜனாதிபதிதேர்தலுக்கு முன்னர் இனப்பிரச்சினையைத் தீர்த்தே ஆகவேண்டுமென்றார். காமினிதிசநாயக்கா தொண்டமானுடன் சேர்ந்து சிறுபான்மையினர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றகுரல் எழுப்பிவருகிறார்.

ஆனால் பிரேமதாசகுடும்பம், பத்துலட்சம் வீட்டுத்திட்டம், கம்உதாவ என்பவற்றை ஐ தே. கட்சிபின் தள்ளிவைத்துள்ளது. இதை எந்த விதச் சாணக்கியமென்று குறிப்பிடுவது. பிரேமதாசாவுக்கு சாமானியர்களின் செல்வாக்கு இன்றும் மங்கி மடிந்து விடவில்லை என்பது தெளிவு. இந்த நேரத்தில் தேர்தலுக்குச் சிலமாதங்களே இருக்கும் போது பிரேமாவின் மகள் துலாஞ்சனி அப்பாவைக் கொன்றவர்கள் புலிகள் என்பதில் சந்தேகமிருப்பதாக அடித்துச் சொல்லியுள்ளார்

லக்திவ சிங்கள மக்களிடையே செல்வாக்குள்ள பத்திரிகை. அப்பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் துலாஞ்சனி ''எனது தகப்பனாரைக் கொலை செய்தது ஐக்கிய தேசியக் கட்சியினர் தான். அவரைப் புலிகள் தான் கொலை செய்தவர் என்ற

## மேதாவி

கருத்தை நானோ எனது குடும்பமோ ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. புலிகள் தான் கொலை செய்தனர் என்ற போர்வையில் ஐ. தே கட்சியினரே செய்துள்ளனர்' என அழுத்தம் திருத்தமாகச் சொல்லியுள்ளார். ஐ. தே. கட்சி பிரதமர் பிரேமதாசாவின் வருகையின் பின்னர் கடந்த 17 வருடங்களாகத் தென்பகுதியில் வளர்ச்சியடைந்தது. மேல்மட்ட சிங்கள மக்களும் கீழ்மட்டச் சிங்கள மக்களும் ஒன்று சேர ஐ. தே. கட்சியை வளர்த்தெடுத்ததில் பிரேமதாசாவுக்குப் பெரும்பங்குண்டு

அவர் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த போது கிராமசபைக்கும், நகர பட்டினசபைகளுக்கும் அவர் கணிசமான உதவிகளைச் செய்தார். கிராமங்கள் அபிவிருத்தியில் அக்கறை கொண்டார் றெடிமேட் பாலங்களை அமைத்துத் தந்தார். பிரதமராக ஜனாதிபதியாக இருந்த போது கட்டாந்தரைகளைக் கட்டிடங்களாகக் காட்சிதரவைத்தார். கம்உதாவை மூலம் கிராமங்களை நகரமாக்கினார். சுவர்ண பூமித்திட்டத்தைச் செயல்படுத்தி காணி இல்லாதவர்களுக்கு வீடும்வழங்கினார்.

இப்படியான ஒருவர் மறைந்த பின்னர் அவர் சேவையைப் பற்றி பிரசாரம் செய்ய விஜதுங்கா தடையாக இருந்தார். இன்றோ அக்குடும்ப அங்கத்தவர்களே ஐ. தே. கட்சி தான் பிரேமதாசாவைக் கொலை செய்தவர்கள் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுமளவுக்கு மோசமாகிவிட்டது. அடுத்து வரும் தேர்தல்களில் ஐ. தே கட்சியை பிரேமா குடும்பத்தினர் ஆதரித்துப் பகிரங்கமாகப் பேசமாட்டார்கள் என்பதும் தெட்டத் தெளிவாகி விட்டது.

இந்த நிலையில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா டி. பி. விஜேதுங்கா, காமினிதிசாநாயக்கா, ரணில்விக்கிரமசிங்கா போன்ற உயர்சாதிச் சிங்களத் தலைவர்கள் பிரேமதாசா குடும்பத்தினரின் பகிரங்க குற்றச் சாட்டினால் ஐ. தே. கட்சியைக் கட்டி எழுப்புவது நெருப்பாற்றில் மயிர்ப் பாலம் போடப்பட்ட கதையாகவே அமையும்.

கடந்த 40 ஆண்டு காலமாக உடன்படிக்கை பேச்சுவார்த்தை என சிறுபான்மையினர் சிங்களக் கட்சிகளால் சீரழிவுபட்டுள்ளனர். சூடுகண்ட பூனை அடுப்பங்கரை சேரமாட்டாதல்லவா? இந்த நேரத்தில் 'தேர்தலுக்கு முன் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணப்பட வேண்டும்' என ஜனாதிபதியிடம் காமினி கூறியிருப்பது வெறுங்கண்துடைப்பாகவே கருதப்படுகிறது.

தேர்தல் நெருங்குவதால் காமினி தொண்டமான் சேர்ந்து தமிழ் மக்கள் உரிமைகள் தரப்படப் போவதாகக் கூறினாலும் அது எந்தவகையிலும் சிறுபான்மையினரை, சிறப்பாகத் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்த மாட்டா. தென்பகுதைச் சிறுபான்மையும் ஏற்றுக் கொள்ளும்.

ஐ. தே. கட்சி தென்பகுதி மக்களின் வாக்குக்களைப் பெறும் வாய்ப்பை இழந்து நிற்பதுடன் சிறுபான்மையினரின் ஆதரவையும் பெற முடியாதுஇருதலை கொள்ளியாக மாட்டுப்பட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு மக்கள் எதிர்வரும் தேர்தல் பற்றி எல்லாம் அலட்டிக் கொள்ளப் போவதில்லை. இன்னும் சில மாதங்களில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வருமென்றும் எதிர்பார்க்க முடியாது. மழைக் காலிருட்டென்றாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது— இது தான் தமிழ் மக்களின் இன்றையநிலை. கட்டுண்டோம்; பொறுத்திருப்போம் காலம் மாறும்.

## மரவள்ளி கேக்

தேவையான பொருட்கள்: —

| | |
|---|---|
| மரவள்ளிக்கிழங்கு | — 500 கிராம் |
| சக்கரை | — 250 கிராம் |
| கோதுமை மா | — 125 கிராம் |
| தேங்காய் | — ஒரு பாதி |
| நெய் | — 150 கிராம் |
| கச்சான்/ முந்திரிவற்றல் | — 500 கிராம் |
| தேன் | — அரைத் தேக்கரண்டி |
| வனிலா | — அரைத் தேக்கரண்டி |

செய்முறை:

மரவள்ளிக் கிழங்கினை தோல் நீக்கி சுத்தமாக கழுவிய பின்னர் சிறிய தூள்களாக சீவுதல் வேண்டும். இத்துடன் துருவிய தேங்காயும் மேலே கூறிய பொருட்களையும் நன்கு சேர்த்துக் கொள்ளவும் பின் வெண்ணெய் பூசிய தட்டில் வைத்து கனலடுப்பில் வேக வைத்து பின்னர் பரிமாறலாம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் ஒருவருக்கும் வெட்கமில்லை. ரோசமில்லை. அடிமைச் சேவகம் செய்து பழகி விட்டீர்கள்" என்றபடி உள்ளே நுழைந்தான் பூதத்தம்பி.

# இறுதி யுத்தம்

★ 'நீலவண்ணன்' ★

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## முன் நிகழ்வு : ஒன்று

காலம், 1658, ஜூன் மாதம், 21

ஒல்லாந்தக் கொமுசாறி றைச்லொவ் வன் ஹூன்ஸ் என்றவன்சோயன் பெருங் குரலில் எக்காளமிட்டான்: "கோட்டை விழுந்தது. யாழ்ப்பாணப் பட்டினக் கோட்டை எங்கள் வசம் விழுந்தது!"

தளபதியின் வெற்றி முழக்கத்திற்கு ஈடாக, கோட்டை மைதானத்தில் முற்றுகையிட்டிருந்த ஆயிரத்து ஐந்நூறு ஒல்லாந்தப்படை வீரர்கள் பெருங்குரலில் அரவாரித்தனர். நாற்சதுரக்கோட்டையின் உயர்ந்த மதில்களிலும் அதற்கு அப்பால் அடங்கிக் கிடந்த பரவைக்கடலிலும் அவர்களின் ஆரவார ஒலி மோதிப் பரவியது. கோட்டை மதில்களின் கொத்தளங்களில் அரண் இருந்த போர்த்துக்கேய வீரர்கள் தம் முயற்சி தோல்வி கண்டதால் அங்கிருந்து நீங்கி கோட்டையின் உள் மைதானத்தில் துயரத்துடன் குழுமி நின்றனர். கொத்தளங்கள் சரிந்து கிடந்தன.

ஒல்லாந்தரிடம் சரணடைவதைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் இருக்கவில்லை. முப்பத்தேழு வருடங்கள் நான்கு மாதங்கள் பதினேழு நாட்களாக யாழ்ப்பாணத்தில் வெற்றிக்கொடியாகப் பறந்த போர்த்துக்கேயரின் ஆதிக்கக்கொடி கீழிறக்கப்பட்டது. அவ்விடத்தில் ஒல்லாந்தரின் வல்லாதிக்கக்கொடி மீண்டும் ஏற்றப்பட்டது. யாழ்ப்பாண மக்கள் மீண்டும் தம்மை அடிமைச் சாசனம் எழுதிக்கொண்டனர். அரங்கம் ஒன்றே. நடிகர்கள் மாறிக்கொண்டார்கள்.

"இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டால் என்ன?" என்று வேலுப்பிள்ளைக் கமக்காரன் சொல்லிக் கொண்டார்.

"சாய், போர்த்துக்கேயப் பறங்கிகள் மாதிரி வருமோ? இவங்கள் ஒல்லாந்தர் சரியில்லை." என மாப்பாணர் முணுமுணுத்துக்கொண்டார்.

"இதென்ன அடிமை வாழ்வு? யாழ்ப்பாணத்தின் சுதந்திரத்தை மீண்டும் நிலைநாட்ட வேண்டும்" எனப் பூதத்தம்பி கடுஞ்சினத்துடன் சூளுரைத்தான்.

"அப்படியெல்லாம் பேசாதே." என்று எச்சரித்தார் பூதத்தம்பியின் தந்தையார், நல்லூர் புவிநாயக முதலியார்: "நான் இராசவாசல் முதிலியாகப் பதவி வகிப்பவன். இராசத்துரோகமாகப் பேசாதே."

இளைஞன் பூதத்தம்பி கொதிப்படைந்தான்.

"உங்களால் அமைதியாக இருக்க முடிகிறது, ஐயா. என்னால் முடியவில்லை. நல்லூர்ப் பெருங்கோயிலை, கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலை, பொன்னாலை வரதராசப் பெருமாள் கோயிலை, இப்படி நூற்றுக்கணக்கான சைவ ஆலயங்களை இடித்துத் தரை மட்டமாக்கி யாழ்ப்பாணத்து மக்களை வீதியோரங்களில் வரிசையாக நிற்க வைத்து மனதை சங்கிலியாக்கி, கற்களை கரம் மாற்றி மாற்றி முற்றவெளியில் சேர்த்துக்கட்டிய கோட்டையில், அந்த இராசவாசலில் நீங்கள் சேவகம் பார்க்கிறீர்கள். அதை எண்ண வேதனையாக இருக்கிறது, ஐயா" என்றான் பூதத்தம்பி. ஆவேசமாகப் பேசியதால் அவன் குடுமி அவிழ்ந்தது. அடர்த்தியான அவன் கேசம் தோளில் சரிந்தது. அதனை அள்ளி மீண்டும் முடிந்து கொண்டான்.

"யோசிக்காமல் பேசி உன் மூச்சை வீணாக்காதே. காரணத்துடன் பேசு, அடுத்து என் பதவியை வகிக்கவேண்டியவன் நீ."

"அப்படி வகிக்க நேர்ந்தால், அந்தப் பதவியை எதற்குப் பயன்படுத்துவேன், தெரியுமா, ஐயா? ஒல்லாந்தரை இந்த மண்ணிலிருந்து அகற்றுவதற்கு தான்" என்று சிரித்தான் பூதத்தம்பி.

புவிநாயக முதலியைக் கவலை சூழ்ந்து கொண்டது.

"உங்கள் ஒருவருக்கும் வெட்கமில்லை. ரோசமில்லை. அடிமைச் சேவகஞ் செய்து பழகிவிட்டீர்கள்" என்றபடி உள்ளே நுழைந்தான் பூதத்தம்பி.

ஒல்லாந்தர் கொமுசாறி றைக்லொப் வன் ஹூன்ஸ் யாழ்ப்பாணக் கோட்டையின் ஆடம்பரமான மாளிகை ஒன்றின் அறையிலிருந்து, பத்தேவியாவிலுள்ள ஒல்லாந்த வைஸ்ரோயிக்கு அறிக்கையொன்றினை எழுதி உறையிலிட்டான். அவன் ஆடம்பரமான மேசையில் மெழுகுவர்த்திகள் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. சிம்னி விளக்கொன்றும் ஒளி தந்து கொண்டிருந்தது. அறையின் நான்கு பக்கங்களிலும் நல்லூர்ப் பெரிய கோயிலிலிருந்து பறங்கிகளினால் கொள்ளையிடப்பட்ட தூண்டாமணி விளக்குகள் அடக்கமாக ஒளி தந்து கொண்டிருந்தன.

உறையிலிட்ட அறிக்கையை ஏதோ நினைவு வந்தவன் போல, மீண்டும் எடுத்துப் பிரித்துக் கொண்டான். கண்கள் அந்த அறிக்கையில் மேயத்தொடங்கின.

"...இலங்கையின் இறுதிப் பிரதேசமான யாப்னாப்பட்டினத்தை இன்று கைப்பற்றினோம். கடற்கோட்டையும் (ஹெமன்கீல்). யாழ்ப்பாணக் கோட்டையும் இலகுவில் எங்களால் கைப்பற்றப்பட்டன. இந்த யுத்தத்தில் எதிரிகள் பக்கத்தில் 117 போர்வீரர்கள் கடற்கோட்டையிலும். 700 வீரர்கள் யாப்னாக் கோட்டையிலும் கொல்லப்பட்டனர். 800 பேரைக் கைதிகளாக்கியுள்ளோம். எங்கள் தரப்பில் 98 ஒல்லாந்த வீரர்கள் இறந்தனர். 100 பேர் வரையில் கூலிப்படையில் இறந்தனர். 23 பேர் கடுங்காயம் அடைந்தனர்.

...யாப்னாப்பட்டினம் வளமானது. அரிசி, பருத்தி, சாயவேர், யானைகள், உப்பு என்பன இப்பட்டினத்திலுள்ளன. சுதேசிகள் சிறிய உருவத்தினர். பணிவானவர்கள். அவர்களில் பலர் விவசாயிகளாகவும், நெசவாளர்களாகவும், சாயம் போடுபவர்களாகவும் உள்ளனர். அடங்கி வாழப்பழக்கப்பட்டவர்கள்.

கோட்டைக்குள் கைதானவர்கள் எப்பொருளையும் எடுத்துச்செல்ல நான் அனுமதிக்கவில்லை. கோட்டையைக் கைப்பற்றிய போது அகப்பட்ட பொருட்களை ஒல்லாந்தக் கம்பனிக்குரியனவாகப் பதிவேட்டில் பதிந்து பேணியுள்ளேன். சாயவேர் பல சாக்குகளில் அகப்பட்டன. 340 அடிமைகள் கிடைத்தனர். 30 ஆயிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி யுத்தம்

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கற்றாச்கோல் பெருமதியான தங்கம் வெள்ளி ஆபரணங்கள் கொண்ட ஒரு சிறு புதையல் ஒன்றும் கோட்டைக்குள் அகப்பட்டது.

...முஸ்லீம் வர்த்தகர்களுக்கு விற்பதற்காக ஆனைப்பந்தியில் கட்டி வைக்கப்பட்டிருந்த 27 யானைகளையும் எமக்குரியதாக்கி விட்டேன். இந்த யானைக்குப் போர்த்துக்கேயர் மதித்திருக்கும் விலை குறைவு. இவற்றினை முஸ்லீம் வர்த்தகர்களுக்கு நல்ல விலையில் விற்க உள்ளேன். அத்துடன் இவற்றுள் 10 யானைகள் சோழமண்டலக்கவனர் பிற்றிற்கு அனுப்பி வைக்கவுள்ளேன்.

.. எங்களுக்குப் பீரங்கிக்குண்டுகள் தேவை. 12 தொட்டு 24 றாத்தல் நிறை உள்ள குண்டுகளில் 3000 அனுப்பி வைக்கவும். 2 இறாத்தல் தொட்டு 4 இறாத்தல் வரையிலான குண்டுகளில் 2000 அனுப்பி வைக்கவும். பத்தேவியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட துப்பாக்கி மருந்துகள் சிறந்ததாக இருந்தன. இனிமேல் யாப்பாணப்பட்டினத்திலேயே கன்பவுடரைத் தயாரிக்கலாம் என நினைக்கிறேன்.

...பார்வைக்கு அழகான விதவைப் பெண்களையும் கலியாணமாகாத கன்னிப்பெண்களையும் இங்கு தடுத்து வைத்துள்ளேன் எங்களின் போர் வீரர்களுக்கு அவர்களைத் திருமணம் செய்து கொடுக்கவுள்ளேன். குடும்பமாகவிருந்து அகப்பட்ட போர் வீரர்களை அவர்களின் கோவாவிற்கும், ஏனையோரை பத்தேவியாவிற்கும் அனுப்பி வைக்கின்றேன். அவர்களை சிறையில் வைப்பதோ, போத்துக்கல்லிற்கு அனுப்புவதோ உங்கள் சித்தத்தைப் பொறுத்தது..."

கொமுசாறி வன்கோயன் படுக்கைக்குப் போகும் போது நள்ளிரவாகியிருந்தது. தூக்கம் அவன் விழிகளைத் தழுவும் போது அவன் சிந்தனையில், இடிந்து சிதலமாகிவிட்ட போர்த்துக்கேயர் கட்டிய யாழ்ப்பாணக்கோட்டையை மாபெரும் புதிய கோட்டையாக எப்படிக் கட்டுவது என்ற கனவாக விரிந்தது. அப்படியே கண்ணயர்ந்து போனான்.

பூதத்தம்பி மிகுந்த சினத்துடன் தந்தையை விளித்தான்: "இப்பொழுதாவது புத்தி வந்ததா ஐயா?"

மகனை புவிநாயகமுதலி ஏறிட்டுப் பார்த்தார். சற்று நேரம் எதுவும் பேச முடியவில்லை. அமைதியாக அந்த அறையில் சிறிது உலாவினார்.

"பெரிய ஒல்லாந்தேசுவிடம் (வன்கோயன்) நான் தான் விண்ணப்பித்தேன்' எனக்கு வயதாகிவிட்டது. என்னிடத்தில் உன்னை நல்லூரின் இராசவாசல் முதலியாக நியமிக்கும்படி. அதற்கு அவர் ஒப்புக்கொண்டார். ஆனால், பால்தேயஸ் சுவாமிகள் தான், சுண்டிக்குளி சீதாரியின் முதலி அந்திராசியை இராசவாசல் முதலியாக நியமிக்கும்படி பெரிய ஒல்லாந்தேசுவைக் கேட்டுக்கொண்டார்."

"அவன் அவர்கள் மதத்தவன்.."

"இருக்கலாம். உன்னையும் அவர்கள் இராசவாசல் முதலியாகத் தான் நியமித்திருக்கிறார்கள்."

"ஆனால் அந்திராசிக்கு அடுத்த நிலையில், ஐயா. உங்கள் வார்த்தைக்கு அங்கு மதிப்பிருக்கவில்லை."

"அப்படிச் சொல்ல முடியாது, பூதத்தம்பி. கச்சாய் வன்னிமையாக உன் மைத்துனன் கயிலாயபிள்ளையை நியமிக்குமாறு கேட்டேன். அப்படியே நியமித்தனர்."

"கச்சாய் வன்னிமையாக வீரர் எவரும் ஒப்புக்கொண்டிருக்க மாட்டார்கள். வன்னியர்களிடம் திறை பெறுவது இலேசான காரியமா? அதுவும் பனங்காமத்து வன்னியனிடம் கவறு பெறுவதாயின் அதற்குத் தனித்திறமை வேண்டும் என் மைத்துனன் தான் O

(தொடரும்)

வெளிவந்து விட்டது!

● வரதர் கதை மலர் —5

சுதந்திரமாய்ப் பாடுவேன்

"திருச் செந்தூரன்"

சிறுவர்களுக்கான கதை நூல்

விலை ரூபா 12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சஞ்சிகை உலகில் புரட்சி செய்த

# குமுதம் ஆசிரியர் எஸ். ஏ. பி. அண்ணாமலை

(12. 12. 1924 — 17. 4. 1994)

'சுந்தரி'

இந்திய நாடு சுதந்திரம் அடைந்தவுடன் பத்திரிகைகள் தொடங்குவதற்கு இருந்த தடைகள் நீக்கப்பட்டன. நூற்றுக் கணக்கில் பல் வேறு அலையுள்ள இதழ்கள் தோன்றின. அவற்றுள் ஒன்று குமுதம் பத்திரிகை (1947)

இருபத்து மூன்று வயதில் எந்த அநுபவமும் இன்றி குமுதம் பத்திரிகையைத் தொடக்கி அதனை இந்தியாவிலேயே அதிகம் விற்பனையாகிற இதழாக ஆக்கியபெருமை அவருக்குண்டு. சொந்த வாழ்க்கையில் எளிமையாக மனித நேயம் மிக்கவராக, கீதையின் படி நடப்பவராக, சமூக மதிப்பீடுகளைப் பேணும் தன்மையுடையவராக வாழ்ந்தார்.

அவர் வாழ்ந்த தனிப்பட்ட வாழ்க்கைக்கும், வாழ்க்கை நெறிக்கும், குமுதம் பத்திரிகையின் உள்ளடக்கத்திற்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு எனச் சில அறிஞர்கள் கருதுவதும் இங்கு நாம் மனங் கொள்ளத்தக்கது.

தென்னிந்தியாவில் தமிழ் என்பது ஒரு மாநிலமொழி. இந்தியைப் போல அது பல மாநிலங்களில் பேசப்படும் தேசிய மொழியல்ல. அது மட்டு மன்றி இந்தியா வெங்கும் பேசப்படும் தொடர்பு மொழியான ஆங்கிலமொழி போன்றதும் அல்ல. ஆனால் ஒரு தமிழ்ப் பத்திரிகையால் இந்தியாவிலேயே அதிகம் விற்பனையாகும் இதழ் என்கின்ற பெருமையினைக் குமுதம் ஆசிரியர் தமிழுக்குத் தேடித் தந்தார் என்றால் அது சாதாரண விடயம் அல்ல. பத்திரிகை உலகில் அவர் ஓர் ஜாம்பவான் ஓர் இமயம்.

தமிழ் மக்களிடையே வாரப்பத்திரிகைக்கு ஓர் புது மரியாதையையும் அதன் மீது பிரமிக்கத்தக்க கவர்ச்சியையும் ஏற்படுத்தியவர் அவர். 1947ம் ஆண்டு குமுதம் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட போது பல பத்திரிகைகளுக்கு நடுவே அதுவும் ஒரு சாதாரண பத்திரிகையாகவே கருதப்பட்டது.

ஆரம்பகாலத்தில் பல இலட்சங்கள் நட்டமடைந்த போதும் அண்ணாமலை தளர்ச்சியடையவில்லை. பாரம்பரிய பணநிதி அதனைத் தாங்கிக் கொண்ட போது ஒரு இலட்சிய வேள்வியில் இறங்கினார்.

957ம் ஆண்டளவில் அப்பத்திரிகை வியத்தகு வளர்ச்சி கண்டது. மாதப்பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்டு மாதம் இரு இதழாக பரிணமித்து பின் மாதம் மூன்று இதழாகி பின் வார இதழாகியது!

1957 ம் ஆண்டிலிருந்து இன்று வரை கடந்த 37 ஆண்டுகளாக இந்த இடத்தை வேறு எப்பத்திரிகையாலும் நிரப்பமுடியவில்லை. இன்று ஆறு இலட்சத்துக்கு மேற்பட்ட பிரதிகள் வாரம்தோறும் விற்பனையாகின்றன.

அடுத்த வார இதழ் இவ்வாறு அமைந்திருக்கும் என வாசகர் கற்பனை பண்ணிக் கணிக்க முடியாத அளவுக்கு இதழுக்கு இதழ்புதுமையைப் புகுத்தியவர் அமரர் அண்ணாமலை.

அவருடைய தனிப்பட்ட குணாம்சம் பிரமிக்கத்தக்கது. மிகக் குறைவாகப் பேசும் பண்பாளர். பேச்சைக் குறைத்துக் காரியத்தைச் சாதிப்பவர். அவரது முழுச் சிந்தனையும் குமுதம் இதழின் பாற்பட்டதே, வாசகர்களையும் தன் பத்திரிகையின் மூலம் எவ்வாறு மகிழ்வூட்டலாம் என்பதையும் அவர்களுக்கு எது தேவைப்படுகின்றது என்பதையும் சித்திரிப்பதிலேயே தம் வாழ்நாளைக் கழித்தார்

பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பழக்கம் இல்லாதவர் அண்ணாமலை. ஆயினும் பொது நிகழ்ச்சிகளில் யாது நடக்கின்றது என்பதை நன்கு உன்னிப்பாகக் கேட்டு வைத்துக்கொள்வார். சுருங்கச் சொல்லின் தன்னை முன்னிலைப் படுத்திக் கொள்வதில் அவருக்கு என்றுமே நாட்டம் இருந்ததில்லை.

தன் கதைகளைக் கூட தன் தந்தையின் பெயரில் தான் எழுதினார். அரசு கேள்வி பதில் வாசிப்பதற்கென்றே குமுதம் இதழ் வாங்குபவர்களை நாம் அறிவோம். அரசு என்பது அமரர் அண்ணாமலையின் புனை பெயர் தான்.

இவை எல்லாவற்றையும் விட அமரர் எஸ் ஏ பி ஒரு சிறந்த மனிதன். மானுட நேயம் மிக்கவர். உண்மையான மனிதாபிமானி ஒழுக்க சீலர். அவர் கோபம் அமைந்து பேசியதை யாரும் கேட்டிடுக்க முடியாது.

அவரிடம் ஆலோசனை கேட்டு வாழ்வில் உயர்ந்தவர்கள் பலர்.

புகழ் வசதி என்பது அவரது எளிமைவாழ்வை மாற்றியதில்லை. அவரிடம் உலகம் கண்டது மறாத எளிமை. கடும் உளைப்பு, சிந்தனைக்கும். பெயருக்கும் மாறுபடாது வாழ்ந்தவர் அமரர் அண்ணாமலை.

---

புதியநூல்: பாரதி நேசன் வீ. சின்னத்தம்பியின்

# ஓ, கனடா!

அண்மையில் வந்த புனைகதைகளில் பாரதிநேசன் வீ. சின்னத்தம்பியின் "ஓ கனடா" விதந்து குறிப்பிடத்தக்க ஒரு நூலாகும். புனைகதை என்பது ஒரு சிந்தனை ஓட்டம் என்று நாம் கூறுவோமேயானால், அந்தச் சிந்தனை ஓட்டத்திற்கு அணி சேர்க்கின்ற, அரண் சேர்க்கின்ற — சமூக, அரசியல், பொருளாதார வெளிப்பாடுகளின் ஊடே யதார்த்தமான சம்பவங்களை யதார்த்தமான களத்தில் வைத்துச் சரியான ஒரு நோக்கில் பார்த்தால்தான் அதற்கு உயிரும் உடலும் இருக்கும் இதில் பாரதி நேசன் வெற்றி பெற்றுள்ளார் என்றே கூறலாம்.

சின்னத்தம்பி அவர்கள் சமகாலப் பிரச்சனை என்று பலராலும் கூறப்படுவதைக் கையாண்டிருப்பதுடன் அதன் வேர்களை ஓர் அரசாங்க எழுது வினைஞரின் பார்வையில் வரலாற்று ரீதியாகப் பார்த்து, வகுப்பு வாதத்தின் வளர்ச்சிப் படிகளில் சிலவற்றையாவது எம் முன் கொண்டு வந்துள்ளமை இந்தத் துறையில் இங்கு எவரும் செய்யாத ஒன்று.

1960களின் நடுப்பகுதியில் முன்னாள் அமைச்சர் ரீ. பி. இலங்கரத்தினா அரச சேவையில் பணியாற்றும் எழுது வினைஞரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஒரு நாவலைச் சிங்களத்தில் எழுதினார். தமிழில் அந்த வாழ்க்கையை ஓரளவு சித்திரித்திருப்பது 'ஓ கனடா' தான். இந்த வகையில் அன்று வாழ்ந்த ஒரு பகுதியி

ரவிதாசன்

னரின் வாழ்க்கையை இரைமீட்டி அசை போடுவதற்கு, இன்றைய பிரச்சனைகளுடன் இணைத்துக் காட்டியிருப்பது நன்றாகவே அமைந்துள்ளது.

இனப் பிரச்சனையின் தாக்கத்தினை பல வழிகளிலும் வெளிப்படுத்தியதோடு

(19 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் மத்தியில் ………

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வகுப்பில் காணப்படும் மாணவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்கள், சமூக நிலையில் ஒடுக்கப் பட்டவர்களின் பிள்ளைகளே அகதி முகாம்களில் வாழும் சிறுவர்கள் என்ற வகையிலேயே காணப்படுகின்றனர்.

'கெட்டிக்கார வகுப்பு' என்பதும், 'மக்கு வகுப்பு' என்பதும் உண்மையில் சமூக, பொருளாதார அடிப்படையில் அமைந்த பிரிவுகளே!

மாணவர்களை 'கலந்து கட்டி' விட்டாலாவது சக மாணவர்களிடம் கேட்டும், அவர்களைப் பார்த்தும், அவர்களின் உதவி பெற்றும் பின் தங்கிய மாணவர்களும் கற்க முடியும்!

'ஒரு சில மாணவர்களுக்கே கல்வி' என்ற நிலையை மாற்றி, 'எல்லாருக்கும் கல்வி' என்ற இலக்கை அடைவதை நோக்கமாகக் கொண்டு நாம் செயற்பட வேண்டும்!

### பிரதிக் கல்விப் பணிப்பாளர் கருத்து

இப்போது யாழ் மாவட்டம் இரண்டு கல்வி வலயங்களாகப் பிரிக்கப்பட்டு உள்ளது!

ஒவ்வொரு வலயமும் ஒரு பணிப்பாளரின் கீழ் இயங்குகிறது.

யாழ் பிரதேச கல்வித் திணைக்களத்தின் பெரும்பாலான கடமைகள் இப்போது கோட்ட மட்டத்தில் உள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

"வலய அலுவலகங்களின் பெரும்பணி கற்றல் கற்பித்தல் அனுபவங்களை விரிவு படுத்தலும், வளர்ப்பதுமாகவே இருக்கும்" என்கிறார் வலயம் இரண்டில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருக்கும் கோ. சி. வேலாயுதம்!

"நமது மாணவர்களின் பின்னடைவுக்குக் காரணம் என்ன? என்று இவரிடம் கேட்டேன்.

மொழி வறுமை, பயிற்சியின்மை சூழல் என்ற மூன்று காரணிகளை இவர் குறிப்பிடுகிறார்.

சூழல் என்னும் போது பொருள் வளமின்மையும், பெற்றோர் அறிவின்மையும் அதன் முக்கிய அம்சம் என்கிறார்!

"முழுச் சமூகமே கல்வியில் அக்கறை காட்டத் தொடங்கும் போது தான் கல்வி வளம் பெருக முடியும்" என்பது இவர் கருத்து.

### பெருகும் இடைவெளி

நமது மாணவர்களின் கல்வித் தரம் வீழ்ச்சி அடைந்து வருவது உண்மை தான். ஆனால் சமூகத்தில் மேல் மட்டத்தில் உள்ளவர்களின் கல்வி அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை. வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்கள், அகதி முகாம்களில் இருக்கும் பிள்ளைகள் சீவல் தொழிலாளர்கள், மீன்பிடித் தொழிலாளர்களின் பிள்ளைகள் என்பவர்களின் கல்வித்தரம் மிக மிக மோசமாக பாதிப்பு அடைந்து உள்ளது. ஒன்பதாம் பத்தாம் ஆண்டில் இருப்பவர்கள் கூட தங்கள் பெயரைச் சரிவர எழுதத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள்! என்கிறார் முப்பது வருடத்துக்கு மேலாக கற்பித்தல் அனுபவம் உள்ள ஆசிரியர் ஒருவர்.

"பள்ளிக்கூடத்தின் வளம் அத்தனையும் அங்குள்ள ஒருபத்து இருபது வீதமான மாணவர்களை மேலே தூக்கி விடும் முயற்சியிலேயே செலவு செய்யப்படுகின்றன! யாருக்குக் கல்வி தேவையோ அவர்கள் புறக்கணிக்கப் பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள்!" என்று இவர் கூறுவது நம்மைச் சிந்திக்க வைக்கிறது. ○

---

## ஓ கனடா ………

( 8 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இந்திய சமாதானப் படையின் கையாலாகாத்தனத்தையும் வெகு சாமர்த்தியமாகக் காட்டியுள்ளார் கதையில் வரும் பாத்திரங்கள் பொதுமைப்படுத்தப்பட்டு சமூகத்தின் பிரதிநிதிகளாகத் தோற்றமளிக்கிறார்கள் என்றே கூறலாம்.

ஆசிரியரின் கூற்றுப்படி இக்கதை எழுதப்பட்டு மூன்று வருடங்களுக்குப் பின்னரே வெளிவந்திருக்கின்றது. சுடச் சுட அடுப்பில் இருந்து அச்சகத்திற்குப் போகாமல் இருந்த இந்தக்கால தாமதம் தெளிவான பார்வைக்கு வழி வகுத்திருக்குமோ? மதிப்புரையில் குறிப்பிட்டுள்ளது போல் குடாநாட்டுக கிடுகு வேலியால் தவனைப் பார்வை பார்க்காமல் கண்களைத் திறந்து பார்க்க வைத்திருக்கிறார் ஆசிரியர். ○

## பிறைன் லாறா உலக சாதனை!

இரண்டு மாதங்களுக்கு முன்பு டெஸ்ட் கிரிக்கட் ஆட்டத்தில் இங்கிலாந்துக்கு எதிராக 375 ஓட்டங்களைப் பெற்று டெஸ்ட் ஆட்டத்தில் புதிய உலக சாதனையை லாறா ஏற்படுத்தினார்.

இப்பொழுது நடைபெற்ற பவுண்டரி கிரிக்கட் ஆட்டத்தில் இன்னொரு சாதனையாளராகத் திகழ்கிறார் லாறா.

இந்த ஆட்டத்தில் ஆட்ட மிழக்காது 501 ஓட்டங்களை எடுத்து உலக சாதனையை நிலை நாட்டினார்.

பாகிஸ்தான் வீரர் ஹனிப் முகமட் 499 ஓட்டங்களைப் பெற்ற உலக சாதனையை 501 ஓட்டங்களை எடுத்து உலக சாதனையை முறியடித்தார். ○

## சீனாவில் பயங்கர விமான விபத்து

சீன சரித்திரத்தில் இது வரை ஏற்பட்டிராத விமான விபத்தொன்று சமீபத்தில் ஏற்பட்டுள்ளது.

தென் சீனாவில் பயணம் செய்த விமானமொன்று ஆகாயத்தில் இரண்டு துண்டாக வெடித்துப் பறந்தது.

இவ் விமானத்தில் 146 பயணிகளும் 14 விமான சிப்பந்திகளும் இருந்தார்கள். இவர்களில் பலத்த காயங்களுடன் ஒருவர் மட்டும் தெய்வாதீனமாக உயிர்தப்பியதாகவும் ஏனையோர் கருகி மாண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. உள் நாட்டவர்களுடன், வெளி நாட்டவர்களும் இவ் விபத்தில் பலியானார்கள். ○

## மாணவர் கட்டுரை நூல்

ஆசிரியராக இருந்து அனுபவம் பெற்ற திரு சச்சி மாஸ்டர் அவர்கள் மாணவர் 'கட்டுரை மலர்' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். மாணவருக்கு மிகப் பயன்தரும் இந் நூலில் 37 கட்டுரைகள் இருக்கின்றன. ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர்.........

(2ம் பக்கத் தொடர்ச்சி

இந்த 'தேர்' இழுக்கும் வேலையைச் செய்ய நமது சைவப் பெருமக்கள் பெருவிருப்பத்தோடு முன்வர வேண்டும்!

நமது கோயில்களும் 'அறிவுப் பணி' செய்வதில் தமக்குள்ள கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும்!

'சமயம்' என்பது வெறுமனே 'சடங்கு' களுடனும், 'கிரியை' களுடனும் முடிந்து விடுகிற ஒரு சாரியம் அல்ல!

நிச்சயமாக 'சைவசமயம்' அப்படிப்பட்ட ஒன்று அல்ல!

'சைவம்' என்பது 'அன்பு நெறி' மட்டுமல்ல 'அறிவு நெறி'யும் கூட!

அறிவுத் தெளிவின் உச்ச சாதனைதான் 'சைவசித்தாந்தம்'!!

கோயில்களும் கட்டாயம் 'அறிவுப்பணி' செய்வதில் பெரும் பங்கு வகிக்க வேண்டும்! அப்போதுதான் அவை பக்களுக்குப் பயன்படும் நிலையங்களாக இருக்க முடியும்.

இப்போது இங்குள்ள கோயில்களில் பல, தர்மகர்த்தாக்களின் நிர்வாகத்தின் கீழும், பரிபாலன சபைகளின் நிர்வாகத்தின் கீழும் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

பல கோயில்களுக்கு நிறைய வருமானம் வந்துகொண்டிருக்கிறது.

பல கோயில்களில் அர்ச்சனை வருமானம் மட்டுமே ஆண்டொன்றுக்கு மூன்று லட்ச ரூபாவிற்கு வந்துகொண்டிருக்கிறது!

முன்னர் பல கோயில்களில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு அவற்றின் வருமானம் செலவிடப்பட்டு வந்தது.

நமக்கு இப்போதைக்கு இருக்கிற கட்டிடங்களே போதும்!!

இனி வேறு வழிகளில், பயனுள்ள வழிகளில், தமது வருமானத்தைச் செலவு செய்ய கோயில்கள் முன்வர வேண்டும்!

கோயில்கள் எல்லாமே தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை இப்படியான நூல்களை வெளியிடும் பணிக்குக் கொடுக்க முன்வந்தால், இந்தப் பணி மிக எளிதாக நிறைவேறிவிடும்!

இந்த நூல்களை வெளியிடுவது மிகச் சிறந்த 'சைவப் பணி' என்பதை யாருமே மறுக்கமாட்டார்கள்!

யாரிடம் இந்த நிதியைக் கொடுப்பது? யார் இந்த வேலையைத் தொடங்குவது எப்படி இப்பணியை நிறைவு செய்வது?

இந்த நூல்கள் இனி வெளிவரும் போது அழகான பதிப்புகளாக, கட்டுரைகள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும் கொண்டவையாக, எது விதமான அச்சுப் பிழைகளும் இல்லாத பதிப்புகளாக, எடுத்தவுடன் எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும் பார்த்தவுடன் தெரிந்து கொள்ளக்கூடிய முறையில் ஆங்கில நூல்களில் உள்ளது போல அரும்பொருளகராதி உள்ளவையாக, வெளிவர வேண்டும்!

சிறந்த சைவத் தமிழ் அறிஞர்களையும், பல்கலைக் கழகப் பேராசிரியர்களையும் பதிப்பு ஆசிரியக்குழுவினராக நியமித்து இப் பதிப்புக்களை வெளிக்கொணர வேண்டும்!

ஆறுமுக நாவலர் சபையும், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையும், பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையும், யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறையும், தமிழ்த்துறையும், வரலாற்றுத்துறையும், நல்லை ஆதீனமும், துர்க்கா தேவி தேவஸ்தானம் போன்ற தேவஸ்தானங்களும் சேர்ந்து இப் பணிக்கென ஒரு 'தனிச்சபை'யை உருவாக்க வேண்டும்!

அந்தச் 'சபை'யே இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும்!

யாழ்ப்பாணத்து மக்களின் பெருமைக்குரிய இந்தச் சைவத் தமிழ் அறிஞர்களின் நூல்களை யாழ்ப்பாணத்து மக்களும், நமது கோயில்களும் சேர்ந்து மறுபதிப்புச் செய்ய முன்வராவிட்டால், வேறு யார் முன்வருவார்கள்?

# வடக்குக் கிழக்குப் போருக்கு 3330 கோடி ரூபா

இனப் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என்று சகல தரப்பிலிருந்தும் அழுத்தம் கொடுத்து வரும் இந்த நேரத்தில், இலங்கை அரசு ஆயுதங்கள் வாங்குவதில் தான் தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றது.

1994ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 2200 கோடி ரூபாவை ஒதுக்கியதைவிட மேலும் 1100 கோடி ரூபா ஆயுதங்கள் வாங்குவதற்கு ஒதுக்கித் தருமாறு பாதுகாப்பமைச்சு திறைசேரியைக் கேட்டுள்ளது

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் ஆரம்பிக்கப்பட்ட 15,000 வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதில் சிரமத்தை மேற்கொண்ட திறைசேரி, தற்பொழுது ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவினாலேயே முதலாம் திகதி அறிவிக்கப்பட்ட சலுகைகளை வழங்குவதற்கே திண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் பாதுகாப்பமைச்சின் மேலதிக கோரிக்கையை ஒதுக்குவதில் திறைசேரி கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளது. இதற்கான பணம் எப்படிச் சேகரிக்கலாம் என்பதையும் எடுத்துரைக்கின்றது.

ஏற்கனவே பாதுகாப்பு வரி 3½ வீதமாக இருக்கிறது. இதை 7 சதவீதமாக உயர்த்துமாறும், பணத்துக்காக புதிய நாணய நோட்டுகள் அச்சடிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் பாதுகாப்பு அமைச்சுக் கேட்ட மேலதிக நிதியில் இருந்து 150 கோடி ரூபாவை திறைசேரி கொடுத்துவிட்ட போதிலும், உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் நெருக்கடியும், சீரழிந்த நாட்டை புனரமைப்புச் செய்வதற்காக வழங்கப்படும் நிதிகளில் ஆயுதங்கள் வேண்டப்படுகின்றது என்ற பிறநாடுகளின் சந்தேகத்துக்கும் தொடர்ந்து ஆளாக நேரிடுமா என்ற குற்றவுணர்வும், அரசாங்கத்துக்கு இல்லாமலில்லை.

கடந்த காலங்களில் வடக்கு கிழக்குப் போருக்காக வேண்டப்பட்ட ஆயுத உபகரணங்களின் அழிவுகளும், அதை மீளப் பெறுவதற்கு அரசாங்கம் செலவழித்த பணத்தையும் 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை ஒரு கட்டுரையில தெரிவித்துள்ளது.

1992ம் ஆண்டு நடுப்பகுதியில ஆனையிறவில Y 8 ரக விமானம் அழிந்ததோடு அதற்கு ஈடாக பல கோடி ரூபா செலவழித்து புதிய விமானம் வாங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வடக்கு கிழக்குப் போரில் இழந்த ஹெலிகளுக்குப் பதிலாக புதிய ஹெலிகள் கொள்முதல் செய்யப்பட்டமை.

1992ம் ஆண்டு தலைவில்லுக்கு அருகில் 'கந்துல' கப்பல் கடலில் அமிழ்ந்ததும். அதற்குப் பதிலாக 12 கோடி 20 லட்சம் ரூபா பெறுமதியான புதிய கப்பல் வாங்கப்பட்டது.

1991ம் ஆண்டு 45 கோடி ரூபா செலவில் 3 சீனப் பீரங்கிப் படகுகள் வாங்கி, அவைகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. என்று பட்டியல் போட்டு ஆயுதம் வேண்டுவதற்கு செலவழித்த பணத்தை சுட்டிக் காட்டியுள்ளது இந்தப் பணங்கள் அனாவசியமான முறையிலும் செலவிடப்படுகிறது என்றும் கூறியுள்ளது.

1993ம் ஆண்டு 2078 கோடி ரூபாவாக இருந்த பாதுகாப்புச் செலவினம் 1994ம் ஆண்டில் 3300 கோடி ரூபாவைத் தாண்டுமா என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். 'ஞ'

புதினம் 15 — 6 — 94. வரதர் வெளியீட்டுக்காக, யாழ்ப்பாணம் காங்கேசன்துறைச்சாலை 226 ஆம் இலக்க ஆனந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டவர் தி. ச. வரதராசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org